


# வற்றாத ஈரம்

சித்தி றபீக்கா பாயிஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வற்றாத ஈரம்

## சித்தி றபீக்கா பாயிஸ்

வெளியீடு

தேசிய கலை இலக்கியத் தேனகம்

திறனொலி கலை கலாசார ஊடக வலையமைப்பு

சம்மாந்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெயர் : வற்றாத ஈரம்

வகை : கவிதைகள்

நூலாசிரியர் : சித்தி றபீக்கா பாயிஸ்
166. வைத்தியசாலை வீதி
சம்மாந்துறை - இலங்கை
077 9039509

நூல் உரிமை : நூல் ஆசிரியருக்கு

முதல் பதிப்பு : ஏப்ரல் 2019

வெளியீடு : தேசிய கலை இலக்கியத் தேனகம்,
சம்மாந்துறை

வடிவமைப்பு : நவாஸ் சௌபி

கணினிப் பணி : என்.எம்.ஷர்பான் (திறனொளி)

அச்சகம் : Excellent Print 077 6401296

பக்கங்கள் : 88

பிரதிகள் : 500

விலை : 350/=

ISBN : 978-624-95147-0-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைப் பெற்று வளர்த்து
நிழல் தருவாய் நிமிர்ந்து
நித்திலத்தில் என்னைப் பதித்து
அன்புடன் அறிவூட்டி
அகிலம் என்னைக் காண
அல்லும் பகலுமாய்
அரவணைத்த என் பெற்றோர்க்கும்
(MTM.இஸ்மாயில் UL.குழந்தையும்மா)
அறிவையூட்டிய ஆசான்களும்
வாழ்வை வளமூட்டிய என் கணவருக்கும்
இப்பாரில் படைப்புகளைப் பார்த்திடவைத்த
படைப்புலகிற்கும்
செதுக்கிச் செப்பனிட்ட – நற்
செழுமைகளுக்கும்
உள்ளத்துப் பூக்களைச் சொரிந்து
சமர்ப்பணம் செய்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றியை நீளச் செய்தல்

தினகரன், முஸ்லிம் குரல், மூன்றாவது மனிதன்,
இருப்பு, வானொலி, மனையாள் மண்டபம்,
உதய தரிசனம், பிறை எப்.எம். பட்டறை,

மாறன் யூ ஸெயின், றமீஸ் அப்துல்லா,
மன்சூர் ஏ. காதிர், அனார், நவாஸ் சௌபி,
நௌசாட், ஹச்சி முஹம்மட், ஆத்மா, அறபாத்,
என் பெற்றோர், சகோதரிகள், என் ஆசிரியர்கள்,
என் மாமா. என் நேசமிகு செல்வங்கள்,
என் அன்புக் கணவர் பாயிஸ்
வாசகர் நெஞ்சங்கள்,
சொல்ல மறந்தவர்கள் அனைவருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

*சம்மாந்துறை எனும் மண்பதி – பூர்வீக காலம் முதல் கலைத்துறை இலக்கியத்துறை கலாசாரத்துறை ஆகியவற்றில் பாரம்பரிய வரலாறுகள் பூத்த பெருமைகள் கொண்டதாகும்.*

*எழுதவோ வாசிக்கவோ தெரியாத – எழுந்த மாத்திரத்தில் பல் துறைகளிலும் கவிபாடும் இன்றும் எம் பிரதேச மக்களின் இதயங் களில் இனித்து கொண்டே இருக்கின்றன.*

*இக் கவிப்பாடலை தொடர்ந்து அவ்வப்போது வாழ்வியல் தொடர்பான அம்சங்களை கவிதைகள் வடிவிலும் படைத்து வந்த படைத்துக் கொண்டும் வருகின்ற அறிவும் ஆற்றலும் மிக்க ஆளுமைகளை இருபாலர் மத்தியிலும் அறிந்திருக்கின்றோம் அறிந்து கொண்டும் இருக்கிறோம். இவர்களில் ஒரு சிலரது இலக்கியப் படைப்புக்களைக் காணக்கூடியதாகவும் படிக்கக் கூடியதாகவும் இருக்கின்றன*

*இருந்தாலும் எமது மண்பதியில் இலக்கியம் – படைத்தும் கொண்டிருக் கின்ற படைப்பாளர்களது இலக்கியப் படைப்புக்களைப் காணக் கூடியதாகவும் இருக்கின்றன*

*இருந்தாலும் எமது மண்பதியில் இலங்கிய இலங்கிக் கொண்டிருக் கின்ற படைப்பாளர்களது இலக்கியப் படைப்புக்களை காணக்கூடிய தாகவும் இருக்கின்றன. படைப்பாளர்களது இலக்கியப் படைப்புக்கள் தொகுப்புக்களாகவும் தொகுதிகளாகவும் இன்னும் நிறைய வெளிவர வேண்டி இருக்கின்றன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தவகையில் முதிய பெண் எழுத்தாளர்களுள் சிறுகதை எழுத்தாளர் சுபைதா அமீர் கவிஞினி பரீதா இஸ்மாயில் கலைஜோதி மசூரா ஏ மஜீது கவிஞினி எம்.ரி.தஸ்லிமா, கவிஞினி சித்தி றபீக்கா ஆகியோரின் படைப்புக்கள் எப்பவோ ஆவணங்களாக வெளிவந்து இருக்க வேண்டும் இதற்கான காலங்கள் கனிந்தாக இல்லை. இந்த இடை வெளிக்குள் எமது மண்பதியில் ஆளுமைகளான கவிஞினி எஸ் நுஹா கவிஞினி பௌசியா அலியார் கவிஞினி எஸ்.யு. செஸிலியா ஆகியோரின் கவிதைத் தொகுதிகள் வெளிவந்து இருக்கின்றன.

இதைத் தொடர்ந்து கனியாமல் இருந்த காலம் இப்போது கனிந்ததால் எமது மண்பதியின் ஆளுமை மிக்க கவிஞினி சித்தி றபீக்கா அவர் களின் காத்திரமான கவிதைகளைக் கொண்ட வற்றாத ஈரம் எனும் பெயரில் இப்போது கவிதைத் தொகுதி வெளியாகி இருக்கிறது

இந்த கவிதை நூலுக்கு பேராசிரியர் காலாநிதி றமீஸ் அப்துல்லா (எம்.ஏ) அவர்கள் அணிந்துரை ஒன்றை வழங்கி இருப்பதும் நூலா சிரியரைப் பற்றி கவிஞர் மன்சூர் ஏ காதிர் அவர்கள் எழுதி இருப்பதும் ஆத்ம திருப்தியை தருவதாக இருக்கின்றன.

இந்த வற்றாத ஈரம் கவிதைத் தொகுதியை ஆவணமாக முன் வைத்துள்ள கவிஞினி சித்தி றபீக்கா அவர்களைப் பற்றி சுருக்கமாக விள்ளப் போனால் கல்விப் பயிலும் காலத்தில் இருந்தே கலைத் துறை இலக்கியத்துறை முயற்சிகளில் ஆர்வமும் ஆற்றலும் மிக்க வராக விளங்கினார். எனது தலைமையில் இயங்கிவரும் 'சம்மாந் துறை தமிழ் எழுத்தாழர் சங்கம்' எனும் அமைப்பில் ஒரு பங்காளியா கவும் இலங்குகிறார் இந்தவகையில் இவரது கவிதைத் தொகுதியை வெளியிட வேண்டியது எமது கடமையாகவும் இருக்கிறது

இதன் நிமித்தமாக எமது மண்பதியில் தொகுப்புக்கள் நூல்கள் வெளியீட்டு பணியை இலட்சியமாகக் கொண்டு இயங்கும் தேசிய கலை இலக்கியத் தேனகம் எனும் அமைப்பு எமது மண்பதியின் அறிவிப்பாளரும் கலைஞருமான ஏஸி நௌசாத் அவர்களது தலைமையில் இயங்கி வரும் திறனொளி கலை காலாசார ஊடக வலையமைப்பின் அனுசரனையுடன் வெளியீடு செய்திருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மண்பதியில் இலங்கும் தேசிய கலை இலக்கியத் தேனகம் என்பது கவிஞர் மாறன் யூ செயின் எழுதிய இனிக்கும் தமிழ் இலக்கியம் (பாகம்1) இனிக்கும் தமிழ் இலக்கியம் (பாகம் 02) எழுத்தாளர்களான சஞ்சீவி சிவக்குமார் முஜிப்பூர் றகீப் இணைந்து எழுதிய 'றோசாஜ் செய்கை' கலாபூஷணம் ஈழத் தொண்டன் இஸ்மாயில் எழுதிய 'கூன் நிமிர்கிறது' எழுத்தாளர் எஸ்.எல்.ஆதம்பாவா எழுதிய 'முதன்மைகளும் முதல் மரியாதைக்குரியவர்களும்' கலா பூஷணம் ஏ அஸிஸ் எழுதிய 'கடையில் பூத்த கவிதைகள்' எழுத்தாளர் எம்.எம். நௌஸாட் எழுதிய 'சொர்க்காப்புரிச் சங்கதி' என்று ஒன்பது நூல்களை வெளியீடு செய்திருக்கிறது. இப்போது வெளியிடும் கவிஞினி சித்தி றபீகா பாயிஸ் எழுதிய 'வற்றாத ஈரம்' கவிதை நூலும் இதனோடு இணைகிறது.

இதைத் தொடர்ந்து கலாபூசணம் மாறன் யூ. செயின் தொகுத் தளிக்கும் 'வித்துக்களும் விழுதுகளும்' எழுத்தாளர் ஏ.எம் இப்றாகிம் தொகுத்தளிக்கும் 'மண் மறவா மனிதர்கள்' கவிஞர் சமூக மாமணி ஏ.எம்.முஸ்தபா அவர்களது 'விடிவு வராதா?' கவிதைத் தொகுதி ஆகிய நூல்கள் வெளியிடப்படுவதற்காக அச்சாகிக் கொண்டும் இருக்கின்றன இதேபோன்று எமது மண்பதியின் கலை இலக்கிய கலாசார படைப்பாளர்களது ஆவணங்கள் அவ்வப்போது பூத்து மலர்ந்து வெளிவருவதன் மூலம்தான் அன்னவர்களது அர்பணிப்புக் களை எமது இன்றைய எதிர்கால சந்ததியினர் சுவாகிக்க வாய்ப்பாக இருக்கும்

கலாபூஷணம் மாறன் யூ ஸெயின்
*தலைவர்*
*தேசிய கலை இலக்கிய தேனகம்*
*சம்மாந்துறை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்து பெண் கவிஞர்களுள் பேசப்படுகிற ஒரு கவிஞராக றபீக்கா திகழ்வார்.

*ஈழத்துத் தமிழ்க் கவிதை உலகில் பல்வேறு மாற்றங்கள் இடம் பெற்று வருகின்றன அந்த மாற்றங்கள் கவிதையின் தரம் குறித்ததாக அமைந்ததா என்பது குறித்து வினவ வேண்டியுள்ளது ஆனால், கவிதை எழுதுகின்றவர்களின் வீதம் மிகவும் அதிகரித்திருக்கிறது. அதே நேரம் பெண்களும் கவிதைகளில் ஈடுபாடு காட்டிவருவது குறிப்பிடத்தக்கதாக அமைந்திருக்கிறது. அதிலும் குறிப்பாகக் கிழக்கு பிரதேசத்தைச் சேர்ந்த முஸ்லிம் இளைஞர்களும் நாடளாவியரீதியில் முஸ்லிம் பெண் கவிஞர்களும் குறிப்பிடதக்க அளவு எழுதி வருகிறார்கள். முஸ்லிம் பெண்கள் என்றளவில் இது முக்கியமான மாற்றம் என்றே கருத வேண்டியிருக்கிறது.*

*முதலில் "முஸ்லிம் பெண்" என்று பார்க்கின்றபோது அதுவும் சமகால இலக்கியத்தில் குறிப்பாகக் கவிதைகளில் வரும் படிமங்களும் சித்திரிப்புக்களும் மிகக் கவர்ச்சிகரமானவையாகவும் பிரக்ஞை பூர்வமானவையாகவும் அமைந்துவிடுகின்றன. பெண் கவிஞர்கள் தன்னை முழுமையாகப் பேச வருகின்றபோது, பெண் பற்றிய உணர்வு நிலைகளோடு மாத்திரம் நின்றுவிடாது சமகால இலக்கியத்தின் உயர் நிலை சித்திரிப்புக்குள்ளும் அமிழ்ந்துகொண்டே அதனை வெளிப்படுத்துகிறபோது அதற்கு இருக்கின்ற விமர்சனங்கள் மிக அழுத்தமுடையனவாக மாறிவிடுகின்றன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் இனமுரண்பாட்டுச் சூழ்நிலையும், இனமுரண்பாட்டுக்குப் பின்னரான சூழ்நிலையும்கூட "பெண்" பற்றிய பிரச்சினைகளைப் புதிய தளத்திற்கு நகர்த்தியுள்ளன. பாதிக்கப்பட்ட பெண்ணினது உணர்வுகள் இந்தச் சூழ்நிலையின் "பிரதி"களாகவும் அமைந்து விடுகின்றன. பெண் இருப்பு, அதனோடு அவள் சார்ந்த சமூக இருப்பு முதலானவையும் கவிதைகளில் வெளிப்படத் தொடங்கின பொதுவாக ஈழத்துப் பெண்ணிடம் ஏற்பட்ட விழிப்புணர்ச்சி அதே சமகாலத்தில் முஸ்லிம் பெண்களிடத்தில் ஏற்பட்டதாகக் கூற முடியாது. முஸ்லிம் பெண்கள் கல்வி கற்பதற்கே ஒரு காலத்தில் தடை இருந்தது. சமூக ஈடுபாடுள்ளவர்களாகச் செயற்பட அவர்கள் அனுமதிக்கப்படவுமில்லை அவள் வீட்டுக்குரியவளாகவும் வீட்டு நிருவாகத்தை நடத்துவதற்குரியவளாகவுமே கணிக்கப்பட்டாள். சித்திலெப்பையின் "அசன்பே" கதையில் வரும் பாளினாவே முஸ்லிம் மறுமலர்ச்சியின் அடையாளமாவாள். பாளினாவைப் போன்ற முஸ்லிம் பாத்திரத்தைக் காண இச்சமூகத்திற்கு 100 வருடம் எடுத்திருக்கிறது.

இன்று முஸ்லிம் பெண்கள் கல்வி கற்றிருக்கிறார்கள். நிருவாக ரீதியாக முக்கிய பதவிகளில் அமர்ந்திருக்கிறார்கள். உயர் கற்கை துறைகளில் பதவி பெற்றிருக்கிறார்கள் இலக்கியத்திலே அக்கறை காட்டி வருகின்றார்கள். குறிப்பாக முஸ்லிம் பெண் கவிஞர்கள் பலர் இந்தக் காலத்தில் எழுதுவதை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். இந்த எழுத்துக்கள் பொதுவாக அமைந்த அதேநேரம் பெண்களின் அவஸ்தைகளையும் வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கிறது.

1980களில் தான் முஸ்லிம் பெண்களும் எழுத தொடங்கினார்கள் இலங்கை வானொலியிலும் பத்திரிகையிலும் எழுதிய ஒரு சிலரைத் தவிர, பெண் என்ற பிரமையுடன் எழுதிய முஸ்லிம்களின் பெண் குரலாக அமைந்தவர் சுல்பிகா. இவரது "விலங்கிடப்பட்ட மானிடம்" என்ற கவிதைத் தொகுதியே முஸ்லிம் பெண்களின் முதல் கவிதைத் தொகுதியாகும். ஆனால், "சொல்லாத சேதிகள்" என்ற ஈழத்துப் பெண்களின் முதல் கவிதைத் தொகுதியில் முதல் முஸ்லிம் பெண் குரலாக மசூரா ஏ மஜீதின் கவிதைகளே வெளிவந்தன அஷ்ரஃபா நூர்தீன் முதல் ஸர்மிளா ஸெய்யித் வரை இந்தப் பாதை மிக நீண்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உயிர்வெளி" "பெயல் மணக்கும் பொழுது," "மீசான் கட்டைகளில் மீழ எழும் பாடல்கள்", "கண்ணாடி முகங்கள்" என்ற தொகுப்புக்களில் வெளிவந்த முஸ்லிம் பெண்களின் கவிதைகள் தவிர தனியார்களின் தொகுதியும் பல வந்துள்ளன. எல்லா பெண்களும் எழுதுவது போன்று முஸ்லிம் பெண்களுக்கு எழுத முடியாதிருந்தது. சுதந்திரத்துடன் அவர்கள் தமது கருத்துக்களை முன்வைக்கத் தயங்கினர். ஆணா திக்க அடக்குமுறையையும் சமய விவகாரங்களையும் அவர்கள் துணிச்சலுடன் முன்வைக்கவில்லை. ஆரம்பத்தில் அவர்களின் கருத்துக்கள் ஒரு பொதுவெளி சார்ந்ததாகவே இருந்தது. ஆனால், சுல்பிகா இதற்குப் புறநடையானவர்.

இளவயதுத் திருமணம், சீதனம், கல்வி மறுப்பு, கலாசார அடக்கு முறை ஆணாதிக்கம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு என்பதோடு காதல், பாலியல் உணர்வுகளையும் முன்னணி முஸ்லிம் பெண் கவிஞர்கள் எழுதுகின்றனர், மொத்தத்தில் அவர்களின் கவிதைகள் முஸ்லிம் பெண்களின் வலியும் வேதனையும் வெளிக்கொண்டு வந்தன. இவ்வகையில் 2000ஆம் ஆண்டுகளில் சம்மாந்துறையி லிருந்து எழுகின்ற பெண் கவிஞராக எம். ஐ. சித்தி றபீக்காவை அறியக் கிடைத்தது. அக்காலத்தில் 'மூன்றாவது மனிதன்' சஞ்சிகை யிலும் 'முஸ்லிம் குரல்' பத்திரிகையிலும் அவரது கவிதைகள் வெளிவந்தன. வானொலியிலும் அவரது கவிதை அவ்வப்போது வாசிக்கப்பட்டிருக்கிறது.

அப்போதே அவரது கவிதைகளினைத் தொகுதியாகக் கொண்டுவர வேண்டும் என்று அவர் முயற்சித்திருந்தார். அப்போதும் அவரது கவிதைக்கு அணிந்துரை எழுதிய ஞாபகம் உண்டு சுமார் 15 வருடங் களுக்குப் பின்னர் மீண்டும் அதே உணர்வுடன் றபீக்கா இந்தத் தொகுப்பினைத் தந்திருக்கிறார். புதிதாகச் சில கவிதைகளும் இத் தொகுதியில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. நான் முன்னர் கூறிய பெண் பற்றிய உணர்வுடனே இக்கவிதைகளில் பெரும்பாலானவை அமைந் திருக்கின்றன. அதேநேரம் ஒரு பெண் நமது சமூக அரசியல் விமர்சனத் தினை முன்வைக்கத் துணிந்திருப்பது ஒரு முக்கியமான விடயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொத்தத்தில் றபீகா தனது கவிதைக்ளைத் தொகுதியாகக் கொண்டு வர வேண்டும் என்பதில் கொண்டுள்ள ஆர்வத்தைப்போல – நான் அடிக்கடி சொல்வதுபோல நல்ல கவிதைகளை வாசிப்பதிலும் அவற்றில் ஈடுபடுவதிலும் ஆர்வத்தைச் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கவிதை மிக இலகுவில் வந்து விழுவதல்ல ஆனால், அந்தக் கவித்துவ மனப்பாங்கு உள்ளவர்களுக்கு அது வந்து சேர்ந் தாலும் அதில் செப்பணி முக்கியமானதாகும்.

றபீகாவின் கவிதைகளிலுள்ள தொய்வு செப்பனிடல் மூலம் செம்மை யாகும் என்று நினைக்கிறேன் . இக்கவிதைகளின் பொருளும் படிமமும் சொல்லும் திறனும் கவனத்திற்குரியனவாயினும் மீள மீள வாசிப்பின் மூலம் உறுதிப்படுத்தப்படுகிற செப்பனிடல் பணி நல்ல கவிதைகளை உருவாக்க மேலும் உதவும். ஈழத்து பெண் கவிஞர்களுள் பேசப் படுகிற ஒரு கவிஞராக றபீக்கா திகழ்வார். அதற்கான எதிர்காலம் அவருக்கு வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

பேராசிரியர் றமீஸ் அப்துல்லா
*மொழித்துறைத் தலைவர்*
*தென்கிழக்குப் பல்கலைக்கழகம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண் மனதின் குரல்களாக தோற்றம் காட்டும் கவிதைகள்

ஒரு பெண், தன் செயற்பாடுகளிலேயே முதன்மையான செயற்பாடாக எழுத்தை முன்வைக்கத் தொடங்குகிறாள் எனின் இயல்பாகவே அது ஒரு கலகச் செயற்பாட்டின் வடிவமாக மாறிவிடுகின்றது என்பதே எனது அவதானிப்பாகும். அதை அப்பெண் முன்னெடுக்கும் விதத்தினாலேயேதீவிரமடைகின்றது அல்லது தேங்கிவிடுகின்றது

சித்தி றபீகா எழுதிய ஆரம்ப நாட்களும் நான் எழுதிய ஆரம்ப நாட்களும் ஒரே காலகட்டமாகும். மூன்றாவது மனிதன் சஞ்சிகையில் றபீக்காவின் கவிதைகளை வாசித்த ஞாபகம் இருக்கின்றது. இடை நடுவில் சிறுதுகாலம் அவரது எழுத்துச் செயற்பாடுகள் தடைப் பட்டிருந்தன. றபீக்காவின் கவிதைகள் இப்போது தொகுப்பாக வரு வதில் மகிழ்கின்றேன். மேலும் அவருடைய கலகத்தினை புதிய சிந்தனைத் தளத்திலும் விரிந்த இலக்கிய பார்வையோடும் முன்னெடுக்க வேண்டும்.

வாழ்க்கை என்பதே எப்போதுமே ஒரே நேர்கோட்டில் அமைவதில்லை அதற்கான சவால்கள் என்பன ஒவ்வொருவரும் எதிர்கொள்ள வேண்டிய ஒன்றே. அவருக்கான விதிக்கப்பட்ட சுமைகள் தாமே விரும்பி ஏற்ற சுமைகள் என நமது ஆடைகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் பாரங்கள் எத்தனையோ வகையானவை. நாம் ஆபாரணங்களால் துன்பத்தின் வெடிப்புகள் தெரியாமல் அலங்க ரித்தோம். உயர்தரமான மென் புன்னகையால் பாவனைகளால் கடந்து செல்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

90களின் காலகட்டத்தில் பல முஸ்லிம் பெண் கவிஞர்களின் தீவிரமான பங்களிப்பு ஆரம்பமானது. பெண் மொழி உடல் அரசியல் போர்க்கால அனுபவங்களை எழுதத் தொடங்கினார். பல பெண்கள் தமக்கென தனித்துவமான பாதையை தேர்ந்தெடுத்து வெளிப்படுத்தினர். சித்தி றபீக்காவின் கவிதைகள் அன்றைய மனவோட்டத்துடன் இருப்பவை, அக்கவிதைகளை மொத்தமாக வாசிக்கும் பொழுது பெண் மனதின் குரல்களாகவே தோற்றம் காட்டுகின்றன. அவருடைய இயற்கை சார்ந்த பார்வையும் வாழ்வின் மீதான அவதானிப்பையும் அவை கொண்டிருக்கின்றன. எனினும் சமகாலத்தின் நவீன கவிதைப் போக்குகளோடு இன்னும் அவர் புதிய கவிதைகளை தருவார் என நம்புகிறேன்.

அவருக்கு என்னுடைய வாழ்த்துகள்

அனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்ல நினைப்பது

என்னுடைய உணர்வுகள் கவித்துவமெய்தி வரும் காலகட்டங்களில் தான் இத்தொகுதியும் வெளிவருகின்றது. கவிதை தொடர்பான பல விஷயங்களில் தெளிவு கண்டிருக்கிறேன் இன்னும் தேற வேண்டியு மிருக்கிறேன். மனித வாழ்வின் எண்ணங்களையும் இயல்புகளையும் கடந்து என் உள் மன உந்துதல் தந்த வெளிப்பாடுகளே இக்கவிதைகள் கவிதை மொழிக்குள் உணர்வுகள் உயிரோட்டத்தையும் ரிதத்தையும் இனங்காணும் போது எனது கவிதைகளும் பேச முனைகிறது.

உணர்வுகளின் விதைப்புகளில் ருசிக்கும் பழங்கள் தருவதற்காய் தாங்கும் சுமைகள் கடந்து ஏதோ ஒன்றான நுண்ணிய பாய்ச்சலில் இனம்புரியாத இனிமையை மொத்தமாய்க் காண்பிக்கிறேன். 'வற்றாத ஈரம்' எனும் முதலாவது தொகுப்பினூடாக உங்கள் கைகளில் தவழ்கிறேன்.

முற்றும் தெரிந்தவர் முனிவராகவோ கற்றறியாதவர் முட்டாளாகவோ உலகில் வாழ்ந்ததாகச் சரித்திரம் இல்லை எனக்குள்ளான கவிதை மொழிகள் தொடர்பான எனது ஈடுபாட்டிற்குள்ளே வாழ்வின் யதார்த் தங்களைப் பேசும் உணர்வு மொழியாகவே எனக்குள் முளைத்தது உள் மன உந்துதல் தரும் பிரதியீட்டினை எனது கவிதைகளும் உரைக்கு மென நினைக்கிறேன் வரம்பிட்டு வயற்காரன் வைத்து காவல் காத்து எனது கவிதை மரத்தை நான் நாட்டவில்லை சமூகம் யதார்த்தங் களைப் பேசிய போதெல்லாம் என் பேனாமுனை உறங்கவில்லை விழித்தும் விரைந்தும் அசைந்தது. அதன் பின்னணியில் ஆர்வமும் பற்றுதலும் இறுகப்பற்றியது எனது தேடல்களும் வழிகாட்டுதல்களும் உரமாய் அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வின் உணர்வுகளை உள்வாங்குகின்றபோது பதியப்படும் விடயம் முக்கியமாகிறது. யதார்த்தத்தை விட்டும் விலக முடியாது நட்புத் துயரம் - சமூக முரண்பாடு - பெண்ணின் பிரச்சினையென ஒவ்வொன்றுமே என் மனதை தொட்டன.

அப்போது என் கவிதைகள் தொடர்பாக என்னை முழுமையாக இனங்கண்டவராக பிரவாகத் தயாரிப்பாளர் அவர்களைக் குறிப்பிடு கிறேன் ஈவிரக்கமற்ற சிறந்த விமர்சகர் நல்ல கவிஞர்களின் கவிதைத் தொகுதிகளை இனங்காட்டினார்.

எழுத்தாளர் கூட்டத்தின் சிறந்த அறிவூட்டல்கள் சிந்தனைகள் தொடர்ந்தும் எழுதுவதிலும் வாசிப்பதிலும் என்னை ஊக்குவித்து பிரச்சினைகளுக்கும் சவால்களுக்கும் இடையே வெளியற்ற பயணத் தொடராக எனது எழுத்தும் தொடர்கிறது. கவிதைகள் எழுதி என்ன பயன் என்பதையோ பெரிய பட்டம் பதவியையோ தாண்டி என் உள்மன உள்வாங்குதல்களின் அணைக்கமுடியா பிரவாகிப்பு எழுத்தில் பதியப்பட்டன. சிலரை நயந்து தொட்டன பலரை ஆழ்ந்து பார்த்தன அதனால்தான் களங்களும் என்னை இனங்காட்டியது 96ஆம் ஆண்டு பெண்மை எனும் முதலாவது கவிதை வானொலியில் வாசிக்கப்பட்டது. முதலாவது பிரசுரம் 2002 விண்ணப்பிக்கிறேன் எனும் கவிதை தினகரனிலே வெளிவந்தது. மனையாள் நிகழ்ச்சியிலும் அதிகமானவை வாசிக்கப்பட்டிருக்கிறது தவிரவும் இற்றைவரை 50ற்கு மேற்பட்ட கவிதை கட்டுரை - தினகரன் - முஸ்லிம்குரல் - மூன்றாவது மனிதன் இருட்பு என்பவற்றிலே வெளிவந்திருக்கிறது எனது முயற்சியும் ஆர்வமும் அழியாமல் பற்றிக்கொண்டிருக்கிறது. தொடர்ந்தும் எழுத வேண்டும் என்னை வளர்க்க வேண்டுமென்றும் எண்ணியிருக்கிறேன். கால ஓட்டத்தில் தவிர்க்கமுடியாத சூழ்நிலைகளைத்தவிர எனது ஈடுபாடு இருக்குமென்கிறேன் என் பேனா முனை பலத்த குரலாக ஒலிக்கும் போது அதன் எதிரொலியெங்கும் என் இதயக் கனவுகள் முட்டும் பொழுதில் வற்றாத பெருக்கெடுக்கும் கவிதைகள் நனைக்கத் தொடங்கும். மகிழ்ச்சியுற்ற உலகத்தை மீறி யாசகம் செய்யாத உறவாய் உணர் வின் பதிவுகள் மொழியைப் பேசும்போது பலரிடம் எனதுண்மைகள் புலரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவற்ற. பண்பற்ற. பன்முகம்மற்ற எல்லைகளை விட்டும் சலசலத் தோடும் கவிதைகளாய்ப் பேசும் போது வற்றாத ஈரத்தின் நனைவு களில் உலரமாட்டீர்கள். என நினைக்கிறேன் கவிதைகள் தரும் உணர்வுலகம் அதிர்வைத் தருவதாகவும் ஆணி அறைவதா கவும் இருக்கும் போது எழுதப்பட்ட தற்கான பிரயோசனத்தை என்னால் தரக் கூடியதாக இருக்கும்.

நிறைவான திருப்தியைப் பெறமுடியாத போதும் எனதுலகப்பார்வை யின் எல்லையை நிர்ணயம் செய்துகொள்வேன் எதிர்காலங்களிலும் எனது துறைக்கான ஈடுபாடும் பற்றுதலும் மிகப் பலமுள்ளதாக வளர்க்கப்பட வேண்டுமென்பது எப்போதுமுள்ள அவாவாகும் எதிர்கால வளர்ச்சிக்கு என் வாழ்வின் பயணமும் பங்களிப்பும் நல்கு மென நினைக்கிறேன் கூர்மையும் தெளிவும் மொழி நயமும் எனக்குள் இன்றிருப்பதைவிடவும் வளர்க்கப்படல் வேண்டும் என நினைக்கிறேன் இருப்பினும் கற்றது கையளவு கற்காதது உலகளவு என்பதை உணரவும் அர்த்தம் புலரவும் முடிகிறது.

உயிரோட்டமானவை என்ற திருப்தியைத் தரும்போது அதன்பால் தொடர்ந்தும் நல்ல கவிதைகளைத் தரமுடியுமென நினைக்கிறேன். எப்போதும் என் மகிழ்வுக்கும் என் கலைக்கும் ஊன்றாய் அமைந்த என் அன்பு பெற்றோர்க்கும்.

மீண்டும் இந்நூலாக்கத்திற்கு புத்துயிர் கொடுத்த என் அன்புக் கணவர் A.B. பாயிஸ் எனது மாமா I.L.ஆதம்பாவா எனது செல்லக் குழந்தைகளான ஸீனத் ஹன்பா, ஹானிப் அஹ்ஸன், ஸைனப் ஹனா ஆகியோர் உட்பட மேலும் மொழித்துறை விரிவுரையாளர். றமீஸ் அப்துல்லா (sir) அவர்களுக்கும் நூலாசிரியரைப்பற்றிய குறிப்பு எழுதிய மன்சூர் ஏ காதிர் (sir) அவர்களுக்கும் அணிந்துரை வழங்கியிருக்கும் அனார் அவர்களுக்கும் அவ்வப்போது ஆலோசனை களையும் வழிகாட்டுதல்களையும் வழங்கியும் வெளியீட்டுரை வழங்கியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இந்நூலாக்க முயற்சிக்கு பலவகையிலும் ஆணிவேராய் உழைத்துக் கொண்டிருக்கும். எனது அன்புக்குரிய ஆசிரியர் கவிஞர் கலைஞர் கலாபூஷணம் கலைவேள் மாறன் யூ ஸெயின் அவர்களுக்கும். மற்றும் இந்நூலாக்கத்தை செவ்வைப்படுத்துவதில் செயற்பட்ட சகோதரர் திறனொலி நிறைவேற்றுப் பணிப்பாளர் சாமஸ்ரீ தேசமானிய A.C. நௌசாட் மற்றும் கணினி வடிவமைப்பு கலைஞர் N.M. ஷர்பான் நான் நேசிக்கும் எனைச் சூழ்ந்துள்ள அத்தனை உள்ளங்களுக்கும் வாசகர் உலகிற்கும் மொத்தமாய் என் உள்ளம் நிறைந்த நன்றிதனை தெரிவிப்பதோடு முதல் நூல் பதிப்பு எனபதால் குறைகளையும் நிறைகளையும் பெருமனம் கொண்டு என்னை மேலும் செவ்வைப்படுத்தவும் உற்சாகப்படுத்தவும் இந்நூல் சான்றுபகரும் என நம்புகின்றேன்*

சித்தி றபீக்கா பாயிஸ்
*சம்மாந்துறை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வற்றாத ஈரம் வடிந்த பக்கங்கள்


01 விண்ணப்பிக்கிறேன் / 23

02 எங்கிருக்கிறாய் / 24

03 ஒப்புதல் / 25

04 பலவீனம் / 26

05 உண்மைகள் / 27

06 பாடங்கள் புகட்டும் புண்ணியவதி / 28

07 மீன் இரவுகளின் பாதம் / 29

08 விசாலமான எல்லைகள் / 30

09 நமது சின்னம் / 31

10 நாளைய வலி / 32

11 நிஜக்காடு / 33

12 கறிவேப்பிலை மணமடி உனக்கு / 34

13 வெளிச்சமற்ற இரவுகள் / 35

14 கசப்பான பழங்களின் வலிமை / 36

15 நகர்வுகள் / 37

16 கணிக்கப்படமுடியாதவனிடம் / 38

17 வற்றாத ஈரம் / 39

18 நதியில் பிசைந்த காலம் / 40

19 பல்கலைக்கழகத்தாகம் / 41

20 அமைதிக்காடு / 42




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21 உங்கள் தவறுகளிடையே / 43
22 வேளாண்மையின் வரட்சி / 44
23 சிதைவற்ற கட்டிடம் / 45
24 மனிதனாய் மீளுங்கள் / 46
25 மீட்ட முடியாமல் / 48
26 நிலவற்ற நட்புகளின் தோழி / 49
27 சூரிய உதயம் / 52
28 என் கவிதை மரம் / 53
29 மஹா போகத்து வயற்காரன் / 54
30 நட்பின் மீட்டல்கள் / 55
31 பழக்கமும் நானும் / 57
32 என் பேனா / 58
33 நவீனப் பெண் / 59
34 சேற்றுப் புதையல் / 60
35 கட்டுகளுக்கிடையே / 61
36 தூக்கி எறியப்பட்டவள் / 62
37 நாதியற்ற மையங்கள் / 63
38 சமூகத் தோட்டத்தின் சுவாசம் / 64
39 என் உம்மா / 65
40 சூரியனின் செருக்கு / 66
41 மீட்டிக்கொள் / 67
42 ஞாபகத்துயர் / 68



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43 விடியும் பொழுதின் வரவு / 69
44 மனிதம் பற்றிய பாடலும் வலியும் / 70
45 புறப்படு பெண்ணே பொங்கி எழு / 71
46 சிலைத் தேவதையின மறுமணம் / 74
47 புரியும்வரை / 75
48 குருவியின் வீட்டுக்குள் / 76
வண்ணாத்துப் பூச்சிகளின் சப்தம்
49 போதாத புரிதல் / 77
50 எப்போது நுழைந்தது / 78
51 சிறுவர்களே / 79
52 புனித நட்பு உதிர்வதில்லை / 80
53 நுண் கடன் / 81
54 என் பிஞ்சு முகம் / 83
55 வாழ்க்கை / 84
56 மரங்கள் / 85
57. ஓட்டை வீடு / 86
58. இந்த நிலை நீங்குமா / 87



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றாத ஈரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விண்ணப்பிக்கிறேன்

என்றோர் நாள்
பறித்துக்கொண்டு
பெண் என்ற பெயராலேயே
எனக்கு விலங்கு போட்டுவிட்டீர்கள்.

மிகவும் நெஞ்சைப்பிளந்து வரும்
எண்ணமுட்கள் நெருஞ்சிக்காடாக
என்னை தைக்கும்போது
இலட்சியத் தளங்களுக்காய் விண்ணப்பம்.

என் சிறகை பொருத்தவிடுங்கள்
கோழையாய்க் கோலமிட்டுக்
காலங்களைக் கரைத்தவர்களிடம்
இலட்சியப் பெரும் மாலைகளைச்
சூடுவதற்காயும் விண்ணப்பம்

கற்பனை மனிதர்களிடம்
கழுகுப் பார்வைகளில் தப்பித்துக்கொள்ளவும்
அந்தக்கணங்களிலே
பார்வைக்குத் தீட்சண்யப் பாடம் படிக்கவும்
பறக்கும் சிறகைப் பொருத்தவிடுங்கள்.

மனம் முனியிட்டுக்கொள்ளும்
சாபத்திற்குத்தான்
எச்சரிகைவிடுக்கிறீர்கள்
பாதையெங்கும் யதார்த்த முட்கொண்டு
சமூக நூட்களால் குத்தவும் - தைக்கவும்
வரைக்கும் நச்சரிப்பில்லாமல்
உசிதமாய் என்றும்
விண்ணப்பமே செய்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கிருக்கிறாய்?

என்னுள் இடம்பிடித்துவிட்ட நீ
மறைந்திருப்பதுமேனோ.
உன் மௌனங்களின் திரைகளை
அவிழ்த்துப்பார்க்கிறேன்
வெறுமை கலந்த உன் மொழிகளை
மீட்டிப்பார்க்கிறேன்.

உன் நினைவுகளால்
என்னில் விளைந்த வண்ண மலர்கள்
வாஞ்சைகளற்ற விருப்புகளாய்
மாறிப்போனதையும் அறியாயோ
நீ பார்க்கும் பூக்களில்
என் சுவாசங்களை மணந்துகொள்
ஏனெனில் இன்னும் என் சுவாச நாளங்கள்
இசையவே இல்லை.

என் சாந்தி விழிப்புக்காய்
உன் சேதிகள் சொல்லி
சிட்டுக் குருவிகளில்
ஒன்றேனும் அனுப்பிவை
சூளுரைக்கும நேரமல்லவே
இப்பொழுதுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒப்புதல்

வெட்கக்கேடு
ஏற்கனவே பொருத்தப்பட்ட நெஞ்சை
ஏன் இப்போது
கழற்றிக் கொண்டேன்.
கடிகார முள்ளும் நகர நகர
கற்பனைகளால் துரத்தியே
விண்ணை முட்டபோகும்
ஆசைகளால் நிரம்பி
மனம் சுழல்கிறது. ஆலையாய்
காலால் பாதைகளைத் தொட்டு
பாதைகளுக்கு கால்களை விலர்த்தி
நகர்ந்து கொள்கிறேன்
எதிலும் சுதந்திரம் வேண்டும்
என்பதற்காய்ப்போலும்
மற்றவனைப்பார்த்துப் பார்த்து
நெஞ்சத்தைக் கெண்டிக்குதறி
வாசத்தை நினைந்து தொடர
நாற்றம் வீசுகிறது
என்னைச் சுற்றிச் சுற்றி
பொருத்தப் பாடில்லாமலே
என் பாதையை விட்டகன்று
மடத்தனமாகச் சிந்தித்து சிந்தித்து
கறல்களைப்படியவைத்துள்ளேன்
பிளாஸ்டிக்கல்ல நெஞ்சம் என்பதால்
அடிக்கடி சுகம் காண நினைக்கிறேன்.
அதற்குள் ஆத்திரம் கொதிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பலவீனம்

உன் எல்லா இழப்புகளுக்கும்
ஏன் என்னைக் காரணப்படுத்துகிறாய்
வெற்றிகளுக்கு மட்டும்
உன்னைப் போற்றுகிறாய்
என்னைச் சுற்றிலும்
உன் இறுமாப்புகளையும்
சமுதாய வேலிகள்
உண்னைப் பலவீனப்படுத்தாமலும்
என் கடமைகளில் தவறாமலுமிருக்க
நான் பிராத்திக்கின்ற போது
உன் ஒவ்வொரு வார்த்தைகளும்
கோணல் மானலாய்
என் மீதழுத்தப்பட்டு விசுறப்படுகிறது
உன் தாரம் என்பதற்காய்
வேரான திணிப்புக்களை
தாங்கும் என்னிடத்தே காட்டலாம்
இருந்தும்
எல்லாத் தாரங்களும்
நானாகிப் போவதில்லை
என்றோர் நாள்
பலவவீனப்படுவீர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உண்மைகள்

உன்வேர் மண்டலத்தைப்
பற்றிப் பிடித்த பின்தான்
மெல்லச்சிரித்தேன்
உன் வேர்கள்
என் தலை முழுக்கவும் ஓடி விட்டது
யார் வந்து அடியை உசுப்பினாலும்
அசைக்கவே முடியாது
உன் வேர்ப்பகுதிகள்
என்னில் ஊடுருவிய பின்நாளில்
இனிமைகள் சுவைத்தேன்
நல்ல சகுனத்தில்
என்னிடம் நுழைந்திட்டாய்
பொறுக்காதவர் மனம் பற்றி
ஏன் உமக்கு பேச்சு
நார் அறுந்து விடா விருட்சம் -நீ
எப் பெரு வெள்ளம் வந்திடினும்
வற்றாத நீர் ஊற்று
பட்டு விட்டாலும்
வேர்ப்பகுதி தளிர்க்கும்
மறுக்காதே இவ்வுண்மைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடங்கள் புகட்டும் புண்ணியவதி

என் அன்புத்தாயே
இவ்வையகம் பற்றி
கருவறையிலிருக்கும் போதே
கவனமாய்க் கற்றுத் தந்தவள் நீங்களம்மா
எனை அழைக்கும் உங்கள் குரலில்
ஓர் முறை நான்
இறையோன் அவனிடம்
இறைஞ்சுகிறேனம்மா
அருவியாய் ஓடி வரும்
அன்பான வார்த்தைகளால்
மகிழ்ச்சி யொலிகளைச்
சலசலக் கக்காண்கிறேன் நாளுமே
என் சுதந்திர சுவீகரிப்பில்
உங்கள் சொற்கேளாமல்
ஓர் முறையேனும்
சத்தியமாய்ப் பறவேன் தாயே
என் விளையாட்டுப் புத்தியில்
உங்களிடம் நானோ
நோகுதலாய் நடந்தாலும்
நிதானத்தின் பின்னரிலே
ஈடாகா உங்கள் பெருமைதனை
போற்றுகிறேன் பல முறையே
உங்கள் இழப்புகள் யாவும்
என் உயர்வுக்காய் என்பதை
சிந்தனையில் செதுக்கினேன்
என் இழப்புகள்
திசைமாறிய சிறுசுகளுக்கு
தாய்மையின் போற்றுதலையும்
சொல்வது தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள் இரவுகளின் பாதம்

மனசின் வரைதல் பற்றி எப்போதேனும்
உனக்கு நான் சொல்லியிருக்கக் கூடும்
என் இலக்குப் புள்ளியில் நீளும்
ஆன்மாவின் ஆழங்களைக்காணாய்
பெறுமதிக்கனவுக்ள் கவிழ்கிற போதும்
துயர முட்களையும் அறியாய்
இருளின் பாதம்
என்னவாயிற்றதையும் யாரும்மறியார்தான்
காய்த்துப் போன உணர்வில்
மூச்சடக்கிப்போன இதயமாய் மாறி
துளிக்கணங்களில் ஞாபகமூட்டும்
நமது நடைமுறைகளையும்மறந்தாய்
எனது விடியல்கள்
மீள் இரவுகளின் தொடர்ச்சியாய்
என்னிடமே வருகிறது
பின் தொடரும் என் நிழலினை விட
காத்திருக்கும் பலரில்
பாதங்களின் படிகள் உயர்வதும்
உமக்குத் தெரியப் போவதில்லை
உனக்கு மறந்து போய்விடும் போது
மொத்தமாய் அவிழ்த்து
என் பாடல்களின் இனிமையை
ஞாபக மூட்டுகிறேன்
எப்போதும் போல
நடக்கத் தெரியாமலே தவழ்கிறாய்
ஆக ஒவ்வோர் இரவும் மீள மீளப்
பயணிக்கிறது என்னிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசாலமான எல்லைகள்

எனது மௌனம் பற்றி
மேலுமாய்ச் சிந்திக்கிறாய்
உன்னால் முடியுமெனக் கொண்டு
தொடர்ந்தும் துன்புறுத்துகிறாய்
மௌனித்துக் கொள்கிறேன்.
பாதைகளின் முட்களும் கற்களும்
அழுத்தமாய் என்னைத்தைக்கிறது
இவற்றையெல்லாம்
உனக்குப் பலமாக்குகிறாய்
நான் அழுவதும்
உனக்குப்புரிகிறது
இருந்தும்
என் கோழைத்தனம்
உனக்குச்சாதமாகிறது
என் பயணங்களின் சாத்தியம் பற்றி
இன்னும் என்னால் காத்திருக்க முடியாமல்
மனம் மௌனங்களை விலக்குகிறது
என் ஏக்கங்களும் தவிப்புகளும்
எல்லையற்ற விசாலத்தில்
விதைத்திருப்பதை
அறிவாயோ – நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நமது சின்னம்

கேள் முஸ்லிம் தேசப் பெண்ணே
ஒரு காலத்தில்
மரம்
உனக்கு மைக்கல்லாக இருந்தது
பிறகு உனது சின்னமாகியது
சில தருணங்களில் -நீ
வாக்களிக்க நேர்ந்தது
ஆயினும்
கல்புகளில் ஆகர்ஷிப்பின்றியே
சூரிய வெப்பத்திலும் நிலாக்குளிரிலும்
நீண்டு வளர்ந்தது மரம்
இன்றோ
ஆணிவேர் அறுந்து
குற்றுயிராய் சரிந்துளது மரம்
நீ அறியாதுள்ளாய்
மீளமைக்கும் வலுத் தெரியாதுள்ளாய்
சூழும் பயங்கரம் புரியாதுள்ளாய்
சொல்
நீ மூட்டை முடிச்சுகளுடன்
குட்டி நெட்டிகளுடன்
மண்ணின்
தொப்புள் கொடியறுத்துப் பெயரும் நாள் வரை
மௌனித்தா இருக்கப் போகிறாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளைய வலி

*எனது சிந்தனைகளின் துடிப்பு*
*வாழ்வின் உச்சி வரை மோதியது*
*எட்டிப்பார்க்கையில் மறு பதிலைத்தந்தது*
*ஆதங்கமும் ஆசையுமாய்*
*குறுக்கே கட்டப்பட்டது*
*நகர நகர மனம் வானாய் விரிந்தது*
*பூமி நசுக்கிப்பார்த்தது*
*வாழ்வின் தரிசனம் பற்றி*

*வெள்ளை மேகமாய்க் காட்சி*
*உணர் பக்குவத்திலே*
*நியதியும் நிர்ப்பந்தமும் குவியக் குவிய*
*காற்று நிறைந்த பலூனாய் ஆகாயத்தில்*
*தனிமையும் பொழுதும்*
*பேழையில் ஒடுங்கிய பாம்பைப்போல்*
*எனினும்*
*தாங்கும் தளம் சுருங்கி*
*தரை தொட்டுப் பார்த்து*
*மெய் சிலிர்க்கச்செய்வதும் மீறி*
*கை ரேகைகளின் வலியை*
*வரையாத ஓவியமாய்*
*எல்லாமே காட்டிவிட்டன*
*எதுவும் மாறா விட்டாலும்*
*அழகிய கனவுகளில் நின்றும்*
*நாளையும் சிதைக்கும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிஜக்காடு

எல்லாம் சரியாக இருப்பதாகவே
நினைத்துக் கொள்கின்றேன்

உறவு முறையோடு என் பாதங்கள்
வழியனுப்பி வைக்கப்பட்ட போது
கதவுகள் மூடப்பட்டதையும்
கழுத்தில் கட்டப்பட்ட கவலைகளையும் பற்றி
இப்போது உணர்கிறேன்

எனது கால்கள் முட்கள் அடர்ந்த காட்டில்
அழுத்தப்படுகின்றன

இருந்தும்
சிங்கத்தின் கண்களிருந்து
நான் தப்பித்துக் கொள்வேன்
இம்சைகளுக்கு முன்னர்
இப் பெருங்கானகத்தை விட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறிவேப்பிலை மணமடி உனக்கு

என் பள்ளித் தோழியே
உன் இதயச் செவிகளைத் திறந்து
நிதான முடிச்சுக்களை அவிழ்த்துப்பார்

ஓர் உறவுக்காய்
ஏங்கித்தவித்த இரவுகளை
மறந்தேனடி போனாய்

படித்த பாடங்களோடு
உண்டு களித்து விளையாடிய என்னை
வென்று விட்டதாயெண்ணிப்
பழிவாங்குகின்றாயா

மனக்கனதிகளைச் சொல்லி முடிப்பதற்குள்
மடிர்ந்த வேர்களையெல்லாம்
ஒட்டு மொத்தமாய்ப் பற்றவைத்து
என்னிடம் காட்டிய
இனிமைகளையும் கழித்து
நெஞ்சொடுக்கவும் வைக்கிறாய்

அரிவையர் எம்மிலும்
நட்புறவுகளிடையே
ஒப்புதல் வாக்களிப்பது
புரியவில்லையடி

உன்னடையாளங்கள்
யாரையோ பழிவாங்குகையில்
உன் வெற்றுணர்வில்
இன்னுமேனடி
வாசம் தேடுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிச்சமற்ற இரவுகள்

என் பார்வைக் கெல்லாம்
பச்சையாகவே தெரிகிறது
நிச்சயமாய் இப்பச்சைகள்
எனதெல்லை வரையும் நீளும்

என தெல்லைக் கரைகளை ஊடறுத்து
அகண்ட வெளியில்
அழுகிக் குவியும்
சிதைவுகளையும் துகள்களையும்
தினமும் பார்க்கலானேன்

இச்சிதைவுகளைப் புதைக்க
கோரமற்ற மரங்களின் கீழிருந்து
அழகான கணவுகளை
உதிராமலே வளர்க்கலானேன்

ஆயினும்
பூமியின் பார்வைகளில்
அழுக்கனிடையே தளிரும்
வளரியாய்க் காண்கையில்,
ஒடிவுச் சீன்டல்கள் சூழ்வதாய்
வந்த பாடங்கள் சொல்கிற்று
இனியும்
முடிவான வழுயேதுமின்றி
நேசம் சுருங்கிட்ட வாழ்வில்
கால்களும் சேற்றிதல் புதைகிறது
முன்னதைப் போலவே
சூரிய வெளிச்சமற்றே
எனது இரவுகளும் ஓடுகிறதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கசப்பான பழங்களின் வலிமை

நல் வாழ்வொளி
நம்பிக்கைத் தளிர்களில்
நாவின் நுணி மீது விலகி
நெஞ்சின் மேல் கசக்கிறது
சுவைப்பதன் மீது
விலை மதிப்பற்றுப் போகும் வாழ்வு
தொங்கும் கனிகளைச் சுவைக்கும் வேகத்தில்
மாறும் கனங்கள் வழியே
அல்லல் படுவதையும் பார்த்திராய்
வயல்களில் முளைத்திருந்த
என் பழங்களில்
வீசிய கற்கள் துழைத்து
அதிசய மிக்கதாய் கனவுகளை மாற்றும்
ஒவ்வொரு விடயங்களின் பெறுமதியும்
மண்ணில் வீழ்ந்த பழமாயும் திரும்பும்
சுட்டுத் தொட்டுப் பார்க்கும் பழமாயும்
மனம் மதிலும் கீறும்
வலி தாங்கும் சிந்தனையை
அச்சொட்டாய் புதிய வெறும் நம்பிக்கைகள்
ஒவ்வொரு காம்பிலும் தாங்கும்
எங்கோர் மூலைப்பழத்தில்
ஊடுருவித் தாவும் நாள் பற்றியும்
மிக்க எதிர்பார்ப்பு
ஆயினும் கசப்பான பழங்களைப் பறிக்கவும்
இழக்கும் நாள் பற்றிப் புலம்பவும்
அழைத்து போவதல்லவே வலிமை என்றறியவும்
வெகு விரைவாகவே கனியும் எப்போதேனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நகர்வுகள்

இறக்கைகளை விரிக்காமல்
கொடுகும் பறவைகளாயிருந்து
நெருக்கமாய் உள் வாங்கிய நினைவுகள்
இன்னும் அழியவே இல்லை
ரணங்களோடும் காயங்களோடும்
வாழ்வை லயிக்க முடியாமல் நகர்த்தியும்
உச்சி வரை ஏற முடியவே இல்லை
பற்றைகளுக்குள்ளும் மலைகளுக்குள்ளும்
பட்டங்களைத்தேடித் தேடி நீளமாகிற்று வாழ்வு
சிதைவுகளற்ற வேர்களின் வளர்ப்பில்
தைரியங்களையும் நம்பிக்கைகளையும்
வரிந்து கட்டியும் இதமே இல்லை
மீளவும் மீளவும்
கொடுகும் பறவைகளாய் நனைந்த நினைவுகளே
எங்கிலும் பரந்துவிட்டது
இனியும்
கோரப்புயல் வீசாமலும்
ஒடிவுச்சீண்டல் தொடராமலும்
பெரும் நாகரீக மொன்றைக் கட்டியெழுப்பவும்
பரிமாணங்களில் முகங்கள் தெரியும்
சுற்றம் பேதலித்துக் கொள்ளவும்
நகர்வுகளே இல்லை
நெளிவு சுளிவுகளைத் தாங்கித்
தரை முழுக்கவும் தடவி
உணர்வுக்கிளைகளைச் சிதைக்காமல்
விழுதின் வலிமையைப் பேணியும் முடியவேஇல்லை
காற்றெடுத்துச் செல்லும் தூசியாய்
ஒளிமணிகள் படர்கின்ற போதும்
ஞாபக இடுக்குகளில் வெறுமையேதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணிக்கப்பட முடியாதவனிடம்

*அவனின்*
*மகிழ்ச்சிக்காய்*
*இசைவாக்கம் எனக்குள்*
*சொர்க்கச்சுகம் தரும் வரை*
*பணிவிடைபாதங்களுமவனுக்கு*
*வாழ்வுக் கோலத்தின்*
*மொத்தப் பண்புகளும் அணியப்பட்டிருந்தன*
*என் உறவுகளின் உணர்வும் -அவனில்*
*இலட்சியங்களாய்ப் பறந்தாடுகின்றன*
*வாழ்வின் அலகுகள்*
*மென்னிதழாய்ச் செருக்கி*
*வடிவமைக்கப்பட்டிருந்தன*
*காத்திருப்புக்களின் திருப்தி*
*ருசி தட்டும் உணர்வுகளில்*
*பக்குவப்பட்டறைந்தன*
*நசுக்குதலை மீறி – வாழ்வை*
*கலப்பு வர்ணமாய்த் தீட்டினான்*
*இதமான காலமும் நல்கிற்று*
*பழுத்த எண்ணங்கள்*
*நா சொட்டும் இரசமாய்*
*வாயூறிக் கொட்ட*
*பேசப்பட்டான் பலரிடம்*
*பரம்பல் செழித்து உயர உயர*
*பண்பில் பணிவில் எனக்காய்ப்*
*பழக்கப்பட்டான்*
*இறுதிச் சிரிப்பின் ஒலிகளில்*
*இனிமை ததும்பி வழிந்து*
*காலங்களை மாற்றிற்று*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வற்றாத ஈரம்

இன்றும்முற்றாய் அழியவில்லை
கண் நிறையக்காடுகள்
குந்தியிருக்கும்மலைகள்
இவற்றைத் தாண்டி வருவேன்
ஒழிந்து பதுங்கும் பூனைபோல்
நழுவும் அச்சத்தைப்புதைத்து
பறக்கும் வண்ணாத்தூப்பூச்சியாய்
எனது குகைக்குள் நுழைகிறேன்.
பாதச்சுவடுகளின் கீழ்
பாயும் நதிகளின் இசையில்
முளைக்கும் பசிய புட்களாய்
எனது குரலையும் உயர்த்தினேன்
குலத்தில் அழுகலும்
குரலில் அழுத்தமாயும்
பள்ளங்கள் தாண்டி
உயிர்க்கு மழகை
கூரிய வாளால் வீழ்தியும்
செங்கற்களால் கட்டியும்
எனதறைகளைக்கட்டுகின்றனர்
அவர்களுக்குப்புரியாது போகலாம்
மெழுகாய் உருகியும்
எனது தரவைகள் உயர்ந்து
எனக்காக்காத்திருக்கும்
உறவுகள் விசாலித்து
இது போன்று இன்னும் பல
என்னை உணர்ந்ததாயும் காலம் வரும்
நினைவுக்கல்லில் அழகு – எக்
குகைக்குள்ளும் வளர்ந்து
எப்புயலின் அசைவுக்கும் இறுகி
நாளை துணிவாய் எழும்
அதன் வற்றாத ஈரத்தில்
பெருமூச்சுகளின் உயரத்தைப் போல்
புலரும் ஓர்நாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நதியில் பிசைந்த காலம்

*மலர்களையும் - தோப்புக்களையும்*
*அழகாய்ப்பரிமாற்றும் என் நதிவற்றிற்று*
*பனித்துளியில் மிதந்து*
*விழுங்கித்துபிய கனவுகள்*
*தாயின் சிறகினுள் ஒடுங்கி*
*மரகட்டைகளின் கீழாய் வீழ்ந்திற்று*
*குனிந்த வேளைகளில் மிதித்து*
*உறக்கமற்ற எனதிரவுகள்*
*இறந்தவை சொல்லும்*
*சுவாசிப்பதற்கு மட்டுமான இடைவெளியில்*
*பிச்சித்தரும் நிறைவுகள்*
*பாயும் நதியின் ஓசையில்*
*துளைத்து ஓடி வரும் உன்னிடமும்*
*ஒளி எங்குமாகப்படரும்*
*கடந்தவை போக*
*ஆணிவேரைக்கசந்து*
*எதையும் அறியாதாகிட்டதையும்*
*உணர்வுகளைக் கொன்று விட்டதையும்*
*மிச்சமாய்ச் சொல்வதாகிற்று .காலம் முழுக்கவும்*
*அதிர்வில் தோற்று*
*பரிமாற்றிய நதியிடம்*
*பிசைந்து கொள்ளாத பொருக்கு*
*இடை வெளிப்பாலமாக*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்கலைக்கழகத் தாகம்

வெளிக்காட்சிகளின்றியும்
உட்சுவரிலேயே சித்திரம் வரைவதாகிற்று
முயற்சியில் தேய்ந்து
நம்பிக்கையற்றுப் போனது
போன பஸ்ஸைப் போல
தேடித்தேறியும்
எல்லோருக்கும் அமையாத
மர்மமாகியது எனது ஞானம்
முடிந்த பயணமாய் அது இருக்கட்டும்
சொகுசு பயணியாய் உட்கார நேரமில்லை
பயணி என்ற பெயர் வாங்கவும் முடியவில்லை
முடிந்த பயணப்பற்றுதல்
நேற்றைய கனவாகிற்று
அந்தப்பயணம் பற்றிய ஏக்கம்
தூரத் தெரியும் போதெல்லாம்
விசாலமாகப்பெருகிக்
கடல் அலையாய்த்துயர் எழும்
காயங்களுக்காகவும்
வலிகளுக்காகவும்
பயணம் கிடைக்காமலே போயிற்று
பயணத்தை முடிக்காத தாகம்
நாளையும் வலிக்காதிருக்கு
எனைச்சூழும் பாதுகாவர்கள்
உயர்ந்த பாலங்களைப் போடுகிறார்கள்
நடக்க விரும்பும்
என் கால்களுக்கு அறிந்தும் அறியாமலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைதிக் காடு

அடர்ந்த மரத்திற்குள்
வேரின் பக்கமதில்
மலைத் துயர்களின் மடிவு
புரிவாயும் பரிவாயும்
சலசலத்தோடும் ஊனாய்
எல்லைகளை விடாமல்
வளையாமல் துவளாமல்
மிக அழகாகவே வேர்வரை ஓடும்
மனக் கசப்புகள் இன்றி
அள்ளி நிரம்பிய நம்பிக்கைகளில்
புதியவை பேசும்
அழகையும் உணர்வையும்
சந்ததியின் விருத்தி காட்டும்
இரசிக்கவும் - மகிழவும்
மிஞ்சாத உறவு அதனிடம்
மனிதனிடமது உரத்து மொழியும்
அமைதிக்காடுதாயினும்
அன்பில் அழகில் எல்லையற்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் தவறுகளிடையே

*எம்மிதயப் பஞ்சை*
*வெகுவாய்ப் பிசக்குகிறீர்கள்*

*எம்மைச் சூழ்திருந்த*
*தேன் கூடுகளையும்*
*கலைக்கப் போகிறீர்கள்*
*எப்போதும் போலதான்*

*வெட்கப்படாத உங்கள் துணிவு*
*நசுக்குகிறது இப்போதுமே*

*மாற்றங்களுக்குள்*
*விழித்திருந்தும்*
*மூடிக்கொண்டதாய்*
*அர்த்தங்கள் புரியத்*
*தவறுவதுமேன்...*

*எப்போதும் போலவே*
*எங்கள் மென்மைகளையும்*
*புரிவுகளையும்*
*சின்னத்தனமாக்குகிறீர்கள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேளாண்மையின் வரட்சி

*அவனுடைய வயல்*
*மிக்க அழகாய் நேற்றிருந்தது*
*மகிழ்ச்சி ததும்பி*
*வயல் முழுக்கவும் சுற்றியடித்தான்*
*எண்ணெய்யும் பயளையும்*
*வாங்குவதும் அடிப்பதுமான*
*கடுகதி வேகம் நாளாந்தம்*
*பசுமைகள் சூழ்ந்தும் சிறுது காலம்*

*அறக்கொத்தி பூச்சியும்*
*வயற்காரனின் ஏச்சுவாங்கலும் மீதமாகிற்று*

*எதுவுமில்லாக்கையோடு*
*வீடேகும் போதல்லாம்*
*மனப் பெருமை அடித்ததை மறந்தான்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிதைவற்ற கட்டிடம்

அர்ப்பணம் நிறைந்த
என் சிந்தனைகளில்
இலட்சிய ஆத்மாவைக்
கட்டி எழுப்பியபோது
பாதை முழுக்கவும்
புண்பட்ட கரங்களே
எனக்காகின
வாழ் நாளெல்லாம்
புண்களை அணைத்துக்கொண்டு
இருள் நிறைந்த
பயங்கரங்களின் ஊடாகவும்
இலட்சியக் கோட்டையை
கட்டி முடிக்கலானேன்
இடையூறாய் முடியவில்லை
மரப் பிசிர்களை நிறைத்து
அசுத்தப்படுத்தப்பட்டன
ஆனாலும்
இன்னுமுயரக் கட்டினேன்
மீளவும் மீளவும்
ஆதலால்தான்
புண்ணாக்கியவர்களின் முன்
வாழ்ந்தாகிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதனாய் மீளுங்கள்

எல்லையும் இன்மையுமற்ற மனிதர்களே
பிசைந்து பிசைந்து நம்முன் நாறிப்போய் ஊதும்
வன்செயல்களின் வேரைப் பற்றிப்பாடுகிறேன்
முன்னெப்போதிலும் அதிகமாய்
மெலிதாய் போகும் மனிதம்
நுழையத் தயங்குவதைத் தோண்டுவோம்
புதைந்துள்ள சமூக பள்ளத்தாக்கிலிருந்து
ஒழிந்து பேசும் நதியாக
உறங்கும் வண்ணாத்துப் பூச்சியாக
குரல்கள் ஒலிக்கிற போதும்
புதர்களின் கீழ் பிணைக்கப்படுகிறது
கூடவும்
அன்பும் அறமும் சிதைந்து
அறிவும் பற்றும் அழிந்து
நெஞ்சக்கூடெங்கும்
மனச்சாட்சிகள் செத்து
தலைகீழான உலகமாய் நகர்கிறது
இருந்தும் மனிதா
இஸ்லாமியத்தை விழுங்கி
கைப்பற்ற முடியாதுபோகும் யுகத்தினுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரம் பெறுமதியாம்
மனித இயல்புகளையே இழந்துவிடுகிறாய்
உன் நேற்றைய விதைப்புக்கள் வீணாகிவிட்டதை
உணராய்
இஸ்லாமும் இதயமும்
உன் விழிகளில் குந்தியிருப்பதை
பாதங்கள் சொல்வதாயுமில்லை - ஞானம்
தெளிவதாயுமில்லை
இனியும் ஆயிரம் குரல்கள் இணைந்தும்
மனிதத்திருந்தல்கள் ஒற்றைத்தந்தியின் இசையாகவும்
கம்பி வழியற்ற பாலமாகவும் வழுக்கிவிடுகின்றன
உன் சென்ற யுகத்தை விட்டும் எச்சக்காலங்களினதும்
நமது சந்ததிகளுக்காக மீள் ஒழுங்குகள் நீளும்வரை
விழித்துக்கொள்
வரட்சியுறும் மனிதர்களை இஸ்லாமிய ஈரங்களால்
முளைக்கச் செய்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீட்ட முடியாமல்

எங்கே சிநேகிதம்
ஒவ்வொரு வளைவிலும்
முறிக்காமல் பற்ற
மொழிகள் இடையே அதிர்வுற்று
மண்ணாகியது காலம்

ஒற்றைப்பாதையினூடாக
வீண் கற்களை பரப்பி
வன்மைகளின் தடையில்
மீளவும் அதே இடத்தில் நகர்ந்தாய்

இஸ்டங்களை விலர்த்தி
உணர்வுகளைப் பகிர்ந்த போது
அதிர்ச்சியின் ஓசைக்குள்
திரும்ப வேண்டாம் என்றேன்

மீட்பேன் எனும் பிடிவாதத்தில்
நீ - இன்னுமாய்
உணர்வுகளின் கோர்ப்புக்குள்
மனிதனை மேன்மைப்படுத்தினான் - இறைவன்
ஆனாலும்
புரிதலின் தடுமாற்றத்தில்
இறுகிய பரப்பின் நட்பில்
முருங்கை மரமாகும்
பப்பாளி மரமாகும்
ஆணியற்ற நட்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலவற்ற நட்புகளின் தோழி

*என் இனிய தோழிக்கு*
*மரங்களைவிடவும் ஆழமான வேரானாய்*
*புழுதி மண்ணில் நீயும் நானும்*
*கூடிக் குலாவி குஞ்சாம் சோறாக்கி*
*ரசித்த பொழுதுகளை மீட்கிறேன்*

*எம் பால்ய வயதுகளில்*
*கூச்சங்கள் பிசகி*
*விளையாட்டுத் தளங்களில்*
*நாம் சூடிய மலர்கள் யாவும்*
*இன்று கொய்யப்பட்டதாய் மாற*
*என் நினைவுகள் ஊர்கிறது*

*மனக்கனதிகளற்றும்*
*கசப்புணர்வுகளற்றும்*
*எம்மில் முளைத்த நட்பில்*
*காயப்படுத்துவதாயும்*
*சந்தோஷப்படுத்துவதாயும்*
*ஒரு நாள் - நீ பெரியவளாகிட்டாய்*

*அப்பால்*
*எம் பயணங்களில்*
*உன் முகம் தெரியாமல்*
*ஒதுங்கியும் மறைந்தும்*
*பத்திரப்படுத்தப்பட்டாய்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் நாட்களிலே
உனதிலன் நட்புச் சப்தங்களின்றி
எம் விளையாட்டுத் தளங்கள்
பிரம்மையில்
வெறிச்சோடிப்போயின

இன்னும்
ஞாபகமூட்டுகின்ற உனதின்
பழகிய வார்த்தைகளும்
வழிப்படுத்தும் விளையாட்டுக்களும்
செவிகளில் இதயமாகி
அழகிய பாடல்களாகவும்
நதிகளின் இசைகளாகவும்
இன்பங்கள் தருகின்றன

நகர்வுகளிலே
நட்பு இன்னும் கனிவாகி
உன் குடியிருப்பு வீடெனத் தூசுகள் தட்டி
இதயத்தின் மூலைகளில் - நீ
உறவாடுவதாய்ச் சொல்கிறாய்

ஆயினும் - சந்தர்ப்பவாதியாய்
காலங்களோடு எம்மில் மாறினாய்
பிரிந்தும் சென்றாய்
கூடவும்
நாம் கூடி விளையாடும்
நமது மாமரமும் தென்னைகளும்
நம் நட்பை இனி – நீ
எப்படிச் செப்புவாயென அவாவுகிறது

பார்வைகளின்
நம் விளையாட்டுப் பாத்திரங்கள்
பல திசைகளிலும் பரவி
எம் காற்களின் கீழ்
நினைவுகளைத் திறந்து பேசுகின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தும்
புலப்படாத நகர்வுகளில்
ஆச்சரியமில்லை
நட்பை – நீ தூரவும் வீசுவாய்
இளைப்பாறியும் ஞாபகமற்றுமுளாய்
எனினும்
எம் நட்பு சமுத்திரங்களில் நிறம்பியிருக்கின்றன
பூமியும் - வானும்
எமக்கு உற்ற தோழியாக இருக்கின்றன என்றும்
மறவாய் - நீ
பாறையிடுக்குகளில்
முளைத்த புற்களாய்
நாளை மாற்றினாலும்
எம்மில் தோன்றும் சந்ததிகளின்
இதழ்கள் அகல விரியட்டும்
நம் நட்பை பாடட்டும் இறந்து போகாது
இனிதே மலரட்டும்
புதிய சரித்திரம் பேசட்டும்
உனது கைகளை விரித்துக்கொள் தோழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூரிய உதயம்

விடியலின் பொன்வரவுக்காக
எமது வாசல்கள் காத்திருக்கின்றன
காலடிகள் யாவற்றிலும்
இலக்கற்ற திசைகளோடு – எம்மில்
உறவாடுவாய்

பசுமை மொழிகளோடு
உனது பயணங்களும் பேசும்
உதயம் மீதான ஆழங்களை
பறவைகளின் நாதமாகவும்
மலர்களின் விரிதலாகவும்
நதிகளின் இசைகளாகவும்
எமக்கிடையில் தோன்றுகிறாய்

எம் தோட்டத்துப் பனிகள் மேல்
அழகாய் பூக்கும் றோஜா இதழ்
வாசங்களோடு – நீ
வந்தாயெனச் செப்புவோம்

இவ்வுலகை அழகாய் நேசிக்காவிட்டாலும்
எமது புன் முறுவல்களை
உம்மிடமே விதைத்திருக்கிறோம்.

உன் இதயங்களின் இனிமை
எம் வாழ்வுப் பாடல்களை
தாண்டிச் செல்லாத வரங்களோடு பகர்விக்கிறது
இயக்கியவனையும் நோக்குகிறோம்
இனிமை உதயங்கள் ஒவ்வொன்றிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் கவிதை மரம்

ஒவ்வொரு பொழுதும்
என் கனவுகளை உறுஞ்சி
நினைவுகளை இறைத்து
நனவுகளற்ற ஈரத்தில் நீந்தத்துடித்தேன்
அன்றோர் நாள்
கற்பனைத் தென்றல்
என்னைச் சீண்டும் போதுதான்
உணர்வுகளின் உரசலில்
விதைத்துமிருந்தேன்
காலம் என்னைக் கடத்தியும்
மெல்லக்கசியும் வேர்கள் பதித்து
மிரட்டும் வான எச்சரிக்கையிலும்
என் ஆழப் பதிவேடுகளில்
ஊடுருவிய கவித்துவப் பக்கங்கள்
பாதாளம் மட்டும் பதிந்துகொள்ள
உயர்ந்து வளர்ந்திற்று
ருசிக்கும் பழங்கள் தருவதற்காய்
தாங்கும் வேதனைகள் கடந்து
ஏதோ ஒன்றின் இனிமையை
மொத்த மலராய்க் காண்பிக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹா போகத்து வயற்காரன்

அவன் வயற்காரன்
ஒவ்வொரு நாளும்
குத்தகை வயலின் விளைச்சலை
தன்னுள்ளறைக்குள்
பூட்டியே வைத்தான்
தங்க மணிகளுக்காய்
பத்தே நாளைக் காத்திருந்தான்
ஈட்டுக் காசெடுத்து
தத்தியும் தேடியலுத்து
முறிஞ்ச வெள்ளாமையை
வெட்டி எடுக்கும் முன்னே
அடைமழை பிடிச்சாச்சு
அழுதனன் ஓர்முறை அவன்
சூட்டுக் கூலி கூட்டுவதாயும்
ஆள் தேடியலைந்தான்
முடியவே இல்லை
நாள் நாளாயிற்று
வெள்ளமும் போட்டாச்சு
வயலும் உட்டும் போச்சு
இனி மாரிப் போகப் புதிர்ச்சோறுதான்
கூழாச்சே... என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நட்பின் மீட்டல்கள்

கேளும் நண்பனே
எம் இழத்தல்கள் பற்றியும்
எம் மீள்கைத்தளம் பற்றியும்
மெதுவாய் உணர்த்தவே விரும்பினேன்
என்றும்
இயல்பு வாழ்க்கை பற்றியும்
எதிர்வுகூறல் பற்றியும்
ஆணியாய் அறையும்
உன்னை நோக்கி
என் வியப்பும் ஆழமும்
நிகரில்லா நட்பை வளர்க்கலாயிற்று
நட்பில் பாதங்களுருண்டு
திணித்தல்களுக்கப்பால் - சற்றும்
சோர்கையுறாப் பறவையுமாயிற்று
அயற் சூழலும் காலஓட்டமும் நெருக்க
உன் துணிவுகளெனக்
கடமைகளால் சொன்னபோது
எம் நட்பு எச்சிறு நிர்ப்பந்தமுமற்றதாகிற்று
ஆயினும்
என் நேசப் பரிமாணங்களை
உணர்த்துவதிலும் உன்னை அணுக அஞ்சினேன்
என் நேச எல்லைகளிடையே
எனதுயர்வை எட்டமுடியாதென்பதையும்
புனிதமாய்ப் பேண முடியாதென்பதையும்
உணரத்தவறினாய்
எங்கோதொங்கி நிற்கும்
சமூகப்பிரள்வுகளை – நீ
தூர வீசுவதாய் நினைத்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித நட்புகள் பற்றி
உன்னிடம் அமைதியாய் கூடும் நாள்தனில்
உணர்த்திட வருவேன்
அன்றில் வியப்புறுவாய்
மலர்கள்போல் இதமாகவும்
பட்சிகளின் நாதமாகவும்
நிறைந்த பாடங்களை
நாளையென்பதே பகர்விக்கும்
இனியும்
நட்புகள் புனிதமாய் நீளும்வரை
உணர்வற்றதாகவும்
முடிவுற்றதாகவும் பகர்கிறேன்
மனவளங்களை உறுஞ்சிய சமூகத்தில்
நட்புத் துயர்கள்
அழுத்தங்களைத் தந்தபோதும்
புரியாமைகளைத் தொலைத்து
தூரப் பார்வைகளைத் துரத்தி
வளர்க்கும் வரை
நீயாக என்னை எட்டவே முடியாது
வாழும் பாடங்களின் வலிமையில்
பகர்ந்துகொண்டேன்
புரிந்துகொள் நீயாக
அப்போது
மலர்களின் உதிர்தலையும்
நட்புகளின் உறுதிகளையும்
மிகவுப் புனிதமாய்ப் பேணுவாய்
அந்நாளுக்காகத்தான்
உன்னை நான்
இன்னும் நண்பனாக்குகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழக்கமும் நானும்

விசாலமான இருப்பிடம்
சுற்றிவர கடற்கரை
என்னில் ஊறிய இயற்கை
எல்லாம் ஓர்முறை
என்னைப் பார்த்தழுதன
முடிவாய்
வளைத்த கயிறுகளால்
இருப்பிடத்தை நகர்த்தினேன்
குழந்தைகளின் படிப்பு
குழந்தைகளின் எதிர்காலம்
என் நினைவுகளில் தொடர்ந்தேயிருந்தன
என் குழந்தைகள்
கடற்கரையில் விளையாடுவதை
இழந்தார்கள்
என் சுற்றங்களை மறந்தார்கள்
அடையாளங்காணாதவரகள் ஆனார்கள்
பிலேஸ்களிலும்
அந்நியப்பட்ட சூழல்களாலும்
பழக்கப்பட்டார்கள்
தினமும் எனக்காயும் அவர்கட்காயும்
நிலத்தில் கையை ஊன்றி
எழும்ப முயல்கிறேன்
வீட்டு வாடகையும் பேசுகிறது
குழந்தைகளின் படிப்புப் பார்க்கிறது
தலையில் அழுத்தும் வலிகளோடு
இன்றும் எழும்ப முயல்கிறேன்
நாளைய கௌரவம்
என் குழந்தையின் உயர்வு என்பதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் பேனா

என் இதயத்துள்
உராயப்படுபவைகள் பற்றிப்
பற்றிக்கெள்ளும்
என் ஆத்ம இரத்தத்தின்
அர்த்தங்கள் பற்றி
ஓட்டிக்கொள்ளும்
மண்ணோடு அழிகின்ற
மனித விழுமியம் பற்றியும் பேசும்
ஒவ்வொரு மனிதனதும்
பரிபூரணவாழ்வியலின்
பார்வைகள் பற்றிப் பாடும்
அசைகின்ற என்பேனா
என்றும் அசையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவீனப் பெண்

இதற்குமுன்
கனவு காணவில்லை
ஆறுதலடையாத இரவுகள்தான்
பெண்ணியக் கோலங்களின்
போலிப் பூசல்கள் பற்றி
உணர்வுகள்
விழித்தும் விரைந்தும்
எழுகின்றன
நவீன தளமையத்தில்
பெண்களின் நடத்தைகள்
எங்காகியது
இவ்வெக்கை தாங்காமல்
என்னில் பெயர்ந்தெழும்
உட்சுவாசம்
கூர்மைப் பெண் தேடி
தூய்மைப்படுத்துகிறது
அதிசயம் ஏன்
எரிக்கும் சமூகம் ஏன்
சாம்பராகும் பெண்மை எங்கே
இவையெல்லாம் பற்றி
எப்படி நேராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேற்றுப் புதையல்

*சேற்றுக்குள் நின்று*
*வாழ்க்கையை எட்டிப் பார்ப்பவளே*
*நீயாய் விழுந்துவிட்டாய்*
*ஆனாலும் தூரமென எண்ணியதால்தான்*
*ஒதுக்கப்பட்டாய்*
*வெறும் அடிமைப்படுவதிலும்*
*அடங்கிப்போவதிலும்*
*வாழ்நாட்களைச் சிதைத்துவிட்டு*
*அச்சங்களையும் எச்சங்களையும்*
*ஏன் உனக்காக்கினாய்*
*உன் சிந்தனைகள்*
*ஓர்வட்டதுள் மட்டும்*
*பின்னிப் பிணைந்திருப்பது பற்றி*
*உனக்கேன் இன்னும் புரியவில்லை*
*உனைச்சுற்றிய இவைகள்*
*அவிழக்கூடிய வெறும்*
*சிலந்தி வலைதான்*
*நீ சிந்தித்தால் நொடியில் மாற்றலாம்*
*நீதான் சிந்திப்பது அற்பமாகிற்றே..*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டுகளுக்கிடையே

உளம் சுட்டுப் பார்த்த கற்கள்
இன்னும் பழசாகிப் போகவில்லை
உறவுகளின் இழைகள்தான்
உயிர்ப்பற்றதாய் மடிந்து
குட்டியாகிப்போகிறது
அழுத்தங்களின் கசிவுகளிடையே
உணவுப் பாத்திரங்களின் உறவாடல்
உணர்வுகளைப் புதைத்தும் சிதைத்தும்
வாழ்தல்களைத் தொலைத்து
பின்நாட்களில் மீட்டவர்கள்தான்
ஆயினுமென்ன
சிந்தனைகளைச் செதுக்கி
வார்த்தைகளை
மொழிவதற்கும் பகிர்வதற்கும்
தடைக் கற்களாய்த்தான்
நிற்கிறீர்களே – ஆதிக்கத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூக்கி எறியப்பட்டவள்

இப்போதிவள் சிறைக்கைதி
குற்றமின்றித் தண்டிக்கப்படுகிறாள்
தூரத் தெரிந்த மீட்புக்காய்
நரம்பில் தோய்ந்த வேதனைகளோடும்
நியாயத் திசைகளால் நகர்ந்தவள்
சிறுதுளிக் கணங்களற்றபோதும்
சின்னச்சின்ன நிரப்புதல்களால்
எல்லைகளைக்கூட
தாண்டிடத் துணிந்தவள்
ஆனாலும்
தவறிய எல்லைகளால்
புறக்கணிக்கப்படுகிறாள்
மீளமீள நகர்ந்தாள்
இலக்குகளின் எட்டாதூரத்தில்
இப்போதாகிவிட்டாள்
சிறகற்றுப்போன
ஏற்புகளை உதிர்த்தி
சூழ்ந்துவிட்ட ஆட்சேபத்தால்
இவளால் முடியவில்லை
கைதியற்றிருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாதியற்ற மையங்கள்

எம்மையங்களின்
அசைவுகள் பற்றி
எவ்விதம் பகர்வேன்
எம் வெற்றிச் சேர்மானங்கள்
பெறுமானமற்ற தொட்டியில்
கொட்டப்பட்டிருக்கிறது
நெடுநாட்களாய்
அடையாளங்களற்ற உதயப் பாதங்கள்
மீண்டும் எம்கால்களை
அமுத்திப் பார்க்கிறது
இத்தளங்களில்
ஓட்டுச் செவ்வரத்தையாய் மிளிர்ந்து
தாழ்த்தல் மாறாமல்
வெகுதூரம் புதைக்கிறது
தொடர்ச்சியாய் வாழ்வில்
ஒத்துவராத நடைமுறைகளை
காற்றும் தருகிறது
கணக்கும் துயரங்கள்
மொத்தமாய் நிரம்பி வழியும்வரை
இழப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூகத்தோட்டத்தின் சுவாசம்

அத்தோட்டத்துப் பூக்கள்
மிக அழகாகவே பூத்திருந்தது

பொழுதுகள்
அச்சம் கொடுப்பதுதான்
எப்போதுமாயிற்று

சிரிக்கும் தோட்டம்
ஓவ்வொரு வீழ்தலிலும்
சுவாசங்களைத் தொலைத்து
கண்ணீர் வடிய வடிய
அதிர்வு கொள்கிறது

சூழ அரண்கள் இருந்து
பாதுகாப்பை இழந்த சுவாசங்களால்
நாளைக் கழித்த தோட்டம்
தேடியது வேர்களை

வேர்முழுக்கவுமே
தொற்றுப் புழுக்கள் மேய்ந்து
மாறியது நரகமாய்
அப்போதுதான்
சமூகத்துருவங்களும்
இடுப்பு புதையவும் சேறு பூசி
நிதானம் கருகிய கண்களோடு
தோட்டத்தை நோக்கவே
உணர்ந்ததாம் புதைவுகளைப்பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் உம்மா

என் அன்புத் தாயே
உம் இதயக் கனவுகளை நான்
சாகடிக்கும் போதெல்லாம்
எனக்காய் ஊட்டிய உணர்வுப் பண்பு
துணிவுடன் வளர்வதையும்
மறவாயம்மா
படித்ததில் பட்டம் பெறாவிட்டாலும்
பாசமாய் அழைக்கும் உமது குரல்
என்னைத் திசைதிருப்புமம்மா
நமக்குள்ளான ஈரக் கனவுகள்
இதயங்குளிர்ந்து
கனதியாய் பேசும்வேளை
கூர்மையுறும் உணர்வுகள்
நிறையுணவாய் உம்மிடம்
மீளமீளப் பேசும்
கனவுகளின் கனிவும்
கசப்புகளின் அழிவும்
பிரவகித்து ஓடும் இசையில்
நான் மறக்கப்படுவேனம்மா
அதற்குள்ளான நமது கனவுகள்
அழியாது வளரும்
நமது பாசத்தைப்பாடும்
நமது மலர்களும் பூக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூரியனின் செருக்கு

குளிர்க்கும் போதே வியர்க்கிறது
தென்றலோ நெருப்பைச் சுமந்தபடி
புயலாய் வந்து
தலையில் கொட்டுகிறது
மாடிக்குள் ஏசி தோற்றுப்போகிறது
குடிசைக்குள் விசிறி விசுறப்படுகிறது
நிலவொளியின் குளிர்மை தேடி
தாவரங்கள் நிற்கும்
தாழ்வாரங்களில் உலாவல்கள்
மின் விசிறிகளுக்கு
ஒரு வினாடிகூட ஓய்வில்லை
வெக்கை தாங்காமல்
கிணற்றடியில்
பலரும்
ஆக மனிதன்
குளிர் காற்றுக்கும் நீருக்கும்
யாசகனாய்
சூரியனின் செருக்கு
அர்த்தங்கள் புலப்படுத்துவதில்
விவேகமானவனைப் போல்
நிற்கிறது போலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீட்டிக் கொள்

எங்கே சிரேகிதம்
கேளேன் கொஞ்சம்
உன் ஒவ்வொரு முகமும்
காதல் பற்றி மட்டுமே
இஸ்டப்படுகிறது
காலத்தின் வன்மையான தடையில்
நின்றும் விடுபட்டுப் புறப்படு
துன்பம் துயரம் - இன்பம்
நிறையப் பெற்றவன் மனிதன்
உன் சுற்றங்களைப் பார்
கவிதைகளை மட்டுப்படுத்தப்பட்ட
உணர்வுகளாகவே மொழிகிறாய்
அதைவிட்டும் விடுபடு
ஒவ்வோர் உணர்வுகளையும் உறுதிசெய்
மனிதனை இறைவன்
உணர்வுகளின் கோரப்புகளாக்கி
மேன்மைப்படுத்தினான்
மீண்டும் மீண்டும் காதலைப் பற்றி
மட்டும் பாடுவதில் நீயாகிறாய்
கடல் கல்லாகிறது
மனிதம் தொலைந்துபோகிறது
சிந்தனை செய்வாயா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞாபகத் துயர்

இராப்பகலாகப்
எங்கிருந்தோ
குயிலோசை இசைக்கும்போது
குவலயத்தின் கானங்களும்
மீட்டப்படுகிறது

யாருமற்றதான
நிசப்தப் பொழுதுபோல்
நினைவுகளால் மிதிபட்டு
வழிந்தோடும்
கண்ணீர்த்துயர்கள்
மீண்டும் மீண்டும் அழைப்பதாய்

புத்தக அலுமாரி கலைந்தும்
பரவிக்கிடக்கும்
பவித்திரமான பாதிக் கனவுகள்
எழுதி முடிக்கப் போதாத தாள்களோடு

சுயம்பாய்ச் சுழலும்
தென்றலாலும் புற்களாலும்
தங்கள் மொழிகளால்
பேசமுடியுமே தவிர
உணர முடியாதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடியும் பொழுதின் வரவு

இனி வரக்கூடும்
பொழுதுகளைக் குறிக்கிறேன்
வாழைகளின் முற்றத்தில் என
இனிய பொழுதுகளை
காற்றுகளின் வீசுதலின்
காய்ந்த வலிகளில்
கற்களின் கீழாய்த் தொலைத்தேன்

வெறுங்காலால் நடந்தபடி
வாசற் தாவரங்கள் கூர்ந்து
அழகிய முகங்களால் வருடி
மகிழ்ச்சி ஒலிகளை வீசி
கனிந்த மொழியில் உறவாடி
எல்லையிலா அன்பைச்சொரிந்து
நோக்கும்வேளை
பழைய நினைவுகள்
தெரியாதழிந்து போகின்றன
தழுவிய தண்டுகள் வழுக்கிவிடுகின்றன
சுற்றிப் பார்க்கிறது உளம்
ஏக்கம் பார்த்துச் சிரிக்கிறது பூமி
நாளைய வழி நடத்தல் தொடரும்
என்பதில் நகர்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதம் பற்றிய பாடலும் வலியும்

ஞாபகங்களில்
சுடப்பட்டுக்கிடக்கும்
வாழ்க்கையைப் பற்றி
மிகக் கூர்மையாக்குகிறேன்

எம்மண்ணின் பெருமூச்சில்
நட்சத்திரங்கள் உதிர்ந்த இரவுகளில்
எம்முன் நாறிப்போய் ஊதும்
வன் செயல்களைப் பற்றிப் பாடுவேன்

தோழமையுற்றுத் தேன் மனிதராய்ப் பாடினோம்
பின்னொரு யுகத்துள்
அஞ்சியும் அழுது புலம்பியும்
வீண் கனவுகள் கண்டும்
சிதறி வீசப்பட்டிருக்கிறோம்

எம் வாழ்வினுள் முட்களின் மீதொரு பயணம்
நேசங்களை இழந்த யுகம்
அன்பும் அறமும் சிதைந்த தூரம்
அறிவும் பற்றும் புதைத்த யுகம் மீது
மனச்சாட்சியங்கள் செத்த மனிதனைப் பாடுவேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புறப்படு பெண்ணே பொங்கி எழு

உன் ஒரு சொட்டுக்
கண்ணீருக்கு எத்தனை விலை என்பதை
மறந்தேன் போகிறாய்
கடல் சீறியெழும் அலையாய்
உனது பதிவுகளை ஒப்புதல் செய்

இது எனது கீதமென்கின்றாய்
விடுதலையின் பெயரில்
நேற்றைய இசை குறிப்புக்கள் என்கிறாய்
உனதின் கண்ணீர்த் துளிகளின்
பெறுமதிகளை
அறியாதுள்ளாய்
அன்றேல் தூங்கியும்
புதைந்தும் உள்ளாய்
யாரதை மீட்டுவர் என்ற
சிந்தனையின்றித் தவளுகிறாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் பாதங்கள்
பலமிழந்து விட்டதையும்
நழுவிய எச்சங்களையும்
யாரோ இசைப்பது
உனது செவிகளில் பதிந்தும்
சிந்தனைகளில் செதுக்காய்
சிறைக் கம்பிகளுக்குள்
நசிந்து மடங்கும் பூச்சியாய்
கசிந்து வடியும் துகள்களை
காயத் தடயங்கள் இன்றியே.
கத்திரித்துக்கொள்கின்றாய்

உன்னழகில் (தங்கும்)
காய்த்துக் குலுங்கும்
தொங்கும் பழரசங்கள்
பிளியப்படும் கிண்ணங்களில்
சைகை மொழிகளால்

குடித்துக் கொள்கிறாய்
மீளவும் மீளவும் - நீ
புதைக்கப்படுவதும்
நிச்சயமாயிற்று
காலத்தில் கனவுகளும்
கரைந்து செல்கிறது
நீயின்றிய துயரங்களும்
நீளும் போதுதான் (பொழுதுதான்)
இன்றாகிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேய்ப்பவன் இன்றிய
துயரும் நெடுகிலுமாய்
பதியப்படுகிறாய்
உனதின் கால்களை
எந்தச் சூரியனும்
இழுக்கவில்லை
நீயாகவும் நடக்கவில்லை
மந்தைகளாயும்
மங்கைகளாயும்
மறைந்துகொள்கின்றாய்
இனியும் பெண்ணே
புறப்படும்போது
மீள் ஒழுங்குசெய்
அவிழ்ந்துவிட்டவைகளை
நிதானமாய்க் கட்டிக்கொள்.

மொத்தமாய்ப் பதியவைத்து
மெத்தப் பெருமையுடன்
நிமிர்ந்து
வரக்கூடும் பொழுதுகளில்
வாழ்ந்து காட்டி
துணிந்துநில்
புறப்படு பெருமையுடன்
பொங்கி எழு – பெண்ணே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலைத் தேவதையின் மறுமணம்

செதுக்கு
இசைவற்ற கல்லாயிருந்தும்
அழகாய் வடிப்பவன் நீயேதான்
செதுக்கிப் பெறமுடியுமென்றே
செய்தனன் - நீ திருமணம்
திக்கொன்றிலிருந்து பாறையாகிட்டபோதும்
இன்னும்
உளிகள் கூரற்றபோதும்
செதுக்கிச் செப்பனிட முடியுமென்பதையும்
இரசனையை ஊற்ற முடியுமென்பதையும்
தவிரவும் கலை தேவதையாய்க் காண்
இவளை கலைக்குகந்ததற்றதாய்
ஒருபோதும் நினையாய்
இவள் அப்போதும்
அகப்பரப்பு வெளியில்
உலா ஒளியாவும் - சிலவேளை
கடல் அலையின் பேரிரைச்சல் வெற்றியையும்
வாழ்வின் நிரப்பிய கனவுகளையும்
சேர்த்தே தருவதாகிற்றபோதும்
ஞாபகம் மறந்ததாயிற்று உன்னுள்
சில கணங்களின் பின்
பூரணத் தேவதையாய் ஒருமுறை
இனம்காண்
உலகில் நிரந்தரமாய்த்தங்கிவிட
அவள் ஆயத்தமாகியும்
இசைவற்ற பாறையென்றே நினைத்து
சதாவும் ஆழ்தல் தோயுது உன்னுள்
மீள் சிற்பி
இப்போது தேவதை பேயற்றிருக்கிறாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புரியும்வரை

கேள் நண்பனே
இதயத்தை தொலைத்தப்படி
நாகரீகம் ஈ தென்றெண்ணி
இன்பக்களத்தினில்
நீந்தவில்லை – நான்

துலங்கத் துகள்களைப்பற்றியும்
உண்மை உறவுகளைப் புகட்டியும்
உன்னைத் தேடிக்கொண்டேன்
ஆனால் காணவில்லை – உன்னை
நண்பனே
உன் கற்பனை கனவுகளுக்கு
அர்த்தப் பூட்டுக்களை பூட்டிக்கொள்
கூடவே
புரியாப் பாவங்களை எரித்துக்கொள்
உன் வார்த்தையில் கல் மனமும்
உண்மையுணர்வை விலக்கி
பெண்மையைப் பிரித்து
தங்க விதானமாய்த் தொங்கும் உன் மனமும்
என்னைச் சிதைக்கும்போது
எப்படி ஒட்டிக்கொள்வேன்
ஆதலில்தான் இவ்வளவு இடைவெளி
உண்மையென்று உண்மை
உதாசீனத்திற்கு முன்பதாகவே
புரிதல் பூக்களையும்
களங்கமற்ற நட்பினையும்
உன்னில் தூவிக்கொண்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருவியின் வீட்டுக்குள் வண்ணத்துப் பூச்சிகளின் சப்தம்

அற்புதமாய் வளர்க்கப்பட்டிருக்கிறது
வாழ்வெனும் குருவி வீடு

கண்களில் தெரியும்
குருவியின் வீட்டைத் தரிசிப்பதற்காய்
ஞாபகங்களிலிருந்தும் மீள்கிறேன்
காயங்களை மறக்கிறேன்
இரகசிய ஒப்பந்தங்களைப்பேசி
தெளிந்த உறவுகளின் முன்
மிதக்கும் கனவுகளோடும் நுழைகிறேன்
ஆயிரம் மகரந்தக் கற்களை
நிரப்பியவளாக
நான் நாமாகிப் பலகாலம் ஓடுகிறது.
அன்பைத் தெவிட்டாத இன்பப் பெருக்கு
கொத்துக்கொத்தாய்ப் பூக்கும்
மலர்களின் வாசங்கள்
முற்றத்தில் நிரம்பி வழிகின்றன.

ஜன்னலின் இடைவெளியில்
சிறகசைத்துப்பாடும் கானம் கேட்கிறேன்.
அத்தனை முத்தங்களும் என்னைப் பற்றிப் பிடிக்கிறது
வண்ணத்துப் பூச்சிகளின் சப்தம்
சுற்றங்களைச் சிரிக்கிறது
பறந்தாடும் கண்களில் இனிய கதவுகள் பேசுகிறது
நட்பும் வாழ்வும் பற்றி வசீகரித்துக்கொள்கிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதாத புரிதல்

உண்மையுடனும் இதமாகவும்
உருட்டிச்சென்ற காலம்
உன்னையும் என்னையும்
பிணைத்துக்கொண்டது
முறையீடாய்
இடையில் தொற்றிக்கொள்ளும் சலனம்
உனக்கு வெறுமையாகத் தெரியலாம்
நமது புரியாத பாஷைகள்
உண்மைகளின்
இடைவெளிகளைக் கடக்க
சுவராகிவிட்டது மனம்
இடித்துப் புது அணைபோட
தடுக்கிறது உணர்வுகள்
மேற்பரப்பெங்கும் நீயின்றிய உலகம்
உள்ளத்தின் இரகசியங்களை மீறி
சந்தேகம் சுமக்கப்பட்டபோது
கனவுகளும் கலைக்கப்பட்டது
உன்னால் நுகரப்படும்
நாள் ஒன்றின் காத்திருப்புக்காக
நம்பிக்கைத் துகள்களைப் பற்றிக்கொள்கிறேன்
நழுவிய சிதறல்களோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எப்போது நுழைந்தது

இழையோடும் மனிதக் கறைகள்
பாம்பின் புற்றாய் வளர்ந்தும் நெடுகாலம்
சமரசமில்லா வாழ்வாகிற்று
கசிந்தொழுகும் காய வலிகள்
மனசைச் செப்பனிடுகிறது
உள்ளமைதியற்ற பக்கங்கள்
இறந்த சிதிலங்களைப் பேசுகிறது
இலேசாகி இலேசாகி
வலிகள் மனிதங்களைத் தொலைக்கிறது
நேற்றும் இன்றும் நாளையுமாக
விரிகிறது பயங்கரவாதம்
வாழ்வின் தரிசனங்கள்
தினசரிக் குறிப்பிலும் துயர இசையிலுமாக
பதியப்படுகிறது
நாகரீகமற்றவர்களிடம்
குறிப்புக்கள் இல்லாக் குரல்கள்
வாழ்தலின் கீழ் புதைக்கப்படுகிறது
சுமக்கும் வலிகளிலும்
மறையும் கனவுகளிலும்
சந்ததிகளுக்காகவே பழகியும் போயிற்று
இழப்புகளும் எதிர்வுகூறல்களும்
எப்போதும் போலாகிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களே

குழந்தையாயிருந்தபோது
அழகாய் மழலை பேசி
பிஞ்சுக்காலால் எட்டி உதைத்து
மகிழ்ச்சிப்படுத்தி இருப்பாய்

குதூகலமாய்ப் பேசி
இனிமையாய்த் தாவித்தாவி
உனது மொழியில் வாழ்ந்தாய்
தினமும் பள்ளி சென்று
பாடங்கள் பல கற்று
பரிசுகளும் பெற்றுவந்தாய்
பின்நாளில் உன் மொழி மறந்து
சுமைகளும் உமக்காகி
எதிர்கால வாழ்வையும் சிதைத்தாய்
உன் நிலமை பார்க்கையில்
ஞாபகங்கள் வருவதும்
கண்கள் கலங்குவதுமாய்
நாள் ஒன்றும் உதயமாகிற்று
பேசும் உனது குரலுக்காக
வெறும் வார்த்தைகளும்
குற்றச்சாட்டுக்களும்
நம் மத்தியில் உருவாகிற்று
உன் வாழ்வின் தரிசனம் பற்றி
உரைத்துக்கொள்வதும்
உசுப்பிவிடுவதாக
உலகம் கும்மாளமிடுகிறது
உம்மைச் சிதைக்குமீதடங்களில்
தடங்களே இன்றியும்
வலிகள் ஆறாமல் நீள்கிறது
ஈவிரக்கமின்றி நடத்தப்படுவதும்
ஈரமற்ற நெஞ்சுகளுமாய்
மனிதாபிமானம் குறுகிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனித நட்பு உதிர்வதில்லை

நட்பே
அதிர்வுகள் தரும் பேரொளிப் பரப்பில்
வெறுமைச்சாறு கலந்ததே என் வாழ்வு
துயர இசைக் குறிப்புக்களில் என்னைப் புரிந்தாய்
இதமற்றேயிருந்தேன் என்பதில்
இதயக் கனதிகளை வீசி
நட்பு உறவுகளின் கணிப்பீட்டைக் கண்டாய்
புரிதலற்றவர்களைவிட
திசைமாறும் தரிசனங்கள் மீது
அழகாயும் ஆழமாயும் பற்றிக்கொண்டாய்
நமக்குள்ளான நிறைவுகளுக்கு
நாகரீகமோ அலட்சியமோ இன்றி
புனிதத்தைப் பேணினாய்
தளமிட்டும் பக்குவப்படுத்தியும்
இதயப் பாசைகளில் பத்திரப்படுத்தப்பட்டாய்
வாழ்வின் நெருக்குதல் வேளைகளில்
பரவசமாய்ப் பற்றிக்கொள்கிறாய்
சாகாத நம்பிக்கையைத்
தாவித்தருகிறேன் என்பதும்
தடைகளையும் பிரச்சினைகளையும்
திசைமாற்றிக்காட்டினாய் என்பதும்
புதிய சரித்திரத்தைப் பேசுவதாகிற்று
ஆதலின்
உலகத்தைப் புரிந்துகொள்வதில்
நமது பாசைகளும் இலகுவாயிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுண்கடன்

*சற்று முன்னரின் பின்*
*விறைத்துக்கொள்கிறாய்*

*முகவரி தேடி வந்தவனின்*
*வாய் மொழி உரையில்*
*விம்பங்களைப் பார்த்திருக்கிறாய்*

*அடையாள அட்டையில்*
*இத்தனையும் பதியும் என்பதையும்*
*குரல் வளையை நெருக்கும் என்பதையும்*
*நேற்றய கடனில் மறந்தாய்*

*கடன் பற்றித் தெரியாமலும்*
*தொகை பற்றி அறியாமலும்*
*கண் விழி பிதுங்க*
*வாழ்வையும் தொலைக்கிறாய்*

*கடனின் அபயம் பற்றி*
*உன்னைத் தொடர்ந்த நிழலில்*
*மண்டையை உடைத்துக் கொள்கிறாய்*

*கரும்புச் சாற்றைக் குடித்து*
*சக்கையைக் கக்கும் ஆலையாய்*
*அத்தனை சொத்துக்களையும்*
*இழந்தாய்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெஞ்சி மடிந்து
அஞ்சியோடி மறையும் - உன்னவளை
தாரைவார்த்துக் கொடுக்கவும்
வேஷம் போடவும் சொல்கிறான்

நிலமை புரியாமல்
நீ தவிர்த்துக்கொள்ள
மானம கொண்டவள் - உன்னவள்
மடிந்து மறையும் - மறையவும்
தயாராகிக் கொள்கிறாள்

பரிதவிப்பும் உன் விழிப்பும்
பின்வந்த விளைவால்
இத்தனையுமிழக்கிறாய்

சிந்தனை இன்றிய கடனில்
சிதறிப்போன உன் வாழ்வு
சத்தமிட்டு உரைத்தலும்
சட்டையைக் கழற்றி நிற்பதும்
உனக்குப் புரிந்தாகிற்று

உன் அவசரக் கடன் தொல்லை
உலகிற்குத் தெரியாதபடி
மறைக்கப் பார்க்கிறாய்
இழந்துவிட்டவைகளின்
மூட்டைகளைப் பற்றி
மூடனாயும் மடையனாயும்
பாத்திரமேற்றுவிட்டாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் பிஞ்சு முகம்

உன்னில்
என்னை வரைந்த
கோடுகளைப் பார்த்து
மெல்லச் சிரித்தேன்

உன் மொழியில் உறவாடி
நித்தமும் செவியினில் பதித்து
உன்னழகில் விழித்தேன்

பிஞ்சுக்கையை உயர்த்தி
செல்லக் கொஞ்சும் நிலையாக
செழித்துக்குலுங்கும் மரமாகினேன்

மனம் நிறையப் பூக்கவைத்து
தொட்டிலில் தாலாட்டுப்பாடி
தாய் சேய்ப் பாசத்தைப் பாடினேன்

எட்டி உதைத்து — நீ
எண்ணமது நடப்பதும்
எண்ணிலா மகிழ்வைத் தருவதும்
எண்ணங்களைத் தழைத்துக்கொள்வதும்
இப்போது - என்பதனால்
இன்னும் இன்னும் வாழ்கிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை

எவ்வளவு அற்புதமாய்
வார்க்கப்பட்டிருக்கிறது வாழ்வும்

ஒவ்வொரு
விடியலில் இருந்தும்
நேற்றைய நாளல்ல என்பதால் - துயர்
வற்றித் தெளிந்த உறவில்
இன்னமும் தெவிட்டாத இன்பம்

தொட்டுப் பேசி மகிழ்ந்து
கைவிட்டகலாப் பற்றில்
முளைத்தெழும் உண்மைகள் கூறி
நேற்றைய விரக்தியை மறந்தேன்

நான் நாமாக மாற
சிறகசைத்துப் பாடும் கூட்டமாய்
துள்ளி மகிழ்ந்து கூடிக்குலாவி
சுற்றெங்கும்
வண்ணத்துபூச்சிகளின் சப்தம்
என்னைப் பற்றிப்பிடித்தபடி
அன்றாட வாழ்வின் மாற்றம்
வாழ்வை இசைத்துப் பாடும் வேகம்
இந்த நட்பும் வாழ்வும் பதித்த குடும்பம்
தாயாய் பிள்ளையாய்
உறவு பேசி மகிழும் பரிவில்
உலகம் தெரிதல் இதுவேயாகிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரங்கள்

*மரங்கள் மரங்கள்*
*எமைச் சூழ்ந்த மரங்கள்*
*இரசிக்க வைக்கும் மரங்கள்*
*வேரின் உறுதிகளில்*
*நிமிர்ந்து நின்றபடி*
*வாடைக் காற்றிலும்*
*கோடைக் காற்றிலும்*
*ஆடிப்பாடி அசைந்து*
*ஆனந்தம் கொடுக்கும் மரங்கள்*

*காலைப் பொழுதின் இருட்டினில்*
*எழில் கொஞ்சும் அழகினில்*
*இயற்கையின் தரிசிப்பில்*
*மரங்களின் மகிமைகள் பார்*

*இல்லங்கள் தோறும் சூழ்ந்து*
*சுவாசத்திற்கும் சுகாதாரத்திற்கும்*
*சூழல் நடைமுறைக்கும்*
*சுகந்தமாய் நிற்கும் மரங்கள்*

*ஆதலின் நாமோ*
*இயற்கையின் இருப்பிடம் மரங்கள் தனை*
*இருப்பிடத்தின் வலிமைகள் தனை*
*வாழ்க்கையின் சுவாசப்பீடங்கள் தனை*
*நேரோட்ட நிகழ்வுகளின் பிறப்பிடம் தனை*
*மரங்கள் பேணுதலும் நம் கடமை*
*எல்லோரும் பேணுவதிலும் உண்மை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓட்டை வீடு

அண்ணார்ந்து பார்த்ததும்
ஆயிரம் கண்கள் என் வீட்டிற்கு
ஆனாலும்
அழகும் இயற்கையும்
என் வீட்டைச்சுற்றி

எவ்விதமான கவலைகளுமில்லை
பூக்கள் சொரிவதும்
காற்று வீசுவதும்
நதிகள் ஓடுவதும்
பறவைகள் பாடுவதும்
பழகியேவிட்டன

மழைகாலம் வரும் என்றதும்
குழந்தைகளையும்
பொருட்களையும்
பக்குவப்படுத்துகிறேன்
மட்டுமன்றி
ஓட்டை வீடாகினும்
அழகிலும் அழகிலுமாய்
நிம்மதியைச் சுற்றி
நித்திரை செய் என்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்நிலை நீங்குமா

எம்மையங்களிருந்து
மெல்ல மெல்லத்
துயர் கசிகிறது
வாழ்வின் சுமையை
எம்மீது சரிக்கிறது போர்

நம்பிக்கைகள் தகர
உறுதி கலைகிறது
பயரங்கமாகவும்
நிலைகுலைந்தும்
நடுநடுங்குகிறேன்

பரிமாறிக்கொள்ள
பக்கத்தில் எவருமில்லை
தடுமாறித் தேடியலைகிறேன்
திரண்டெழுந்து மீளும்
கலங்கிய பொழுதுகள்
பக்கம் பக்கமாக

வாழ்வெனும்
பேரொளிப்பரப்பில்
பசுமைகளுமில்லை
உறக்கமும் துயரும்
எங்கும் வியாபித்து
மையங்களிலே முளைக்கும்
நிலைகுலைவுகளை
நித்தமும் தருகிறது
இவ்யுகத்தின் துயர்
பண்பற்ற பெருக்காய் மாறிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பின்நவீனத்துவம் கலைப்படைப்பின் ஒரு பேசுபொருளாக ஆகி விட்டதன் பின்னர் இலக்கியத்தின் பன்முகப் பரிமாணம் தன்னை மேலும் அழகுடனும் வீச்சுடனும் வளப்படுத்திக் கொண்டது. இதற்குப் புறநடையான உதாரணங்கள் ஏராளமாக இருந்த போதிலும் கூட அவற்றை களம் உதறி எடுக்கின்றபோது சிற்சில தங்கச் சிமிழ்கள் பிரகாசமாக நிமிர்ந்து நிற்கின்றன.

இந்தப் பாரிய பின்நவீனத்துவ அழகியற் சுழற்சியில் பெண்ணியம் என்னும் பாரிய கலகக்குரல் இலக்கியத்தின் எட்டுத் திக்கிலும் ஆழ வேர்விடத் தொடங்கிற்று. இது பல வெற்றுத் தோட்டாக்களை உற்பத்தி செய்தபோதிலும் அற்புதமான சில பெண் கவிஞர்களை இலக்கிய வெளியில் உலவவிட்டுள்ளது.

இலக்கியத்தில் மாக்ஸியம் ஆரோகணமாகவும் அவரோகண மாகவும் விளைவுகளை உருவாக்கியமைபோல பின்நவீத்து வத்தின் வருகையின் பின்னர் அதில் பெண்ணியம் நிலைகொண்டு படைப்புத்திறன் தொடர்பான சாதகமானதும் பாதகமானதுமான விளைவுகளை தோற்றுவிக்கவே செய்தது. பின்நவீனத்துவத் தினதும் பெண்ணியத்தினதும் செம்மையான கலவை அதன் கலகக் குரலுக்கு அப்பாலும் அற்புதமான சில படைப்பாளிகளை சத்த மின்றி உருவாக்கியுள்ளமை இலக்கியத்தில் ஒரு மௌனப் புரட்சி எனலாம். படைத்தலின் கருத்தியலிலும் அழகியலின் எண்ணக் கருவிலும் தமிழ் இலக்கியத்துள் நிகழ்ந்த இந்த **paradigm shift** தமிழ் இலக்கியப் பரப்பை இன்னும் பசுமையாக்கிற்று. தேர்ந் தெடுத்த ஆழ்ந்த வாசிப்பின் ஊடாக றபீக்கா என்பவருக்கு இது எளிதில் சாத்தியமாயிற்று. இது அவருக்கு ஈழத்து இலக்கிய உலகின் பெண் கவிஞர்களிடையே முதன்மை ஆசனம் ஒன்றை வழங்கியுள்ளது.

பெண்ணியத்தின் கருத்தியல் வருகையின் பின்னர் சிலவேளை வரவு செலவுக் கணக்காய்ப்போன கவிதைகளிடையே றபீக்கா ஒரு பளிங்குச் சிற்பமாகத் தலைகாட்டியுள்ளார். அவரின் கவிதைகள் பற்றிய கரிசனை தமிழ் இலக்கியத்தில் தவிர்க்க முடியாத கவனிப்புக்குரியதாகும்.

**மன்சூர் ஏ. காதிர்**

ISBN : 978-624-95147-0-6

9 786249 514706

cover & print - nawas sawfi

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org